தமிழர் பொருண்மியம்
வாரமலர்
TAMILS ECONOMY

விலை - 100/= | இதழ் - 91 | 05.01.2025

# செயற்கை நுண்ணறிவு: வரமும் சாபமும்!





அரசின் நீண்டகால நிதி மற்றும் பொருளாதார நோக்கங்கள் 10



நவீன விவசாயம் தரும் நன்மைகள் 12



இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு வருகிறதா? 16

பொருளாதாரம் | சுற்றுலாத்துறை | வணிகம் | தொழில் முனைவு | விவசாயம்

# வீட்டுத்தோட்டம்

பூரணி

**நீங்கள் அமைதியற்று இருக்கும் சந்தர்ப்பங்களில் மன அமைதியினை தரக்கூடியது. அதுமட்டுமன்றி உங்களது ஓய்வான நேரங்களை இயற்கையோடு கழிக்கும் சந்தர்ப்பத்தினையும் வீட்டுத்தோட்டம் ஏற்படுத்தி தருகிறது. வீட்டுத்தோட்டத்தினை பேணி பாதுகாத்து பராமரிக்கும் போது உங்களுள் தானாகவே பொறுப்பும் பொறுமையும் துளிர்விட தொடங்கி விடும்.**



வீட்டுத்தோட்டம் உங்கள் உடலுக்கு மட்டுமன்றி மனதுக்கும் ஆரோக்கியமான பல நல்ல விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. வீட்டுக்கு வெளியில் உள்ள முற்றம் அல்லது பின் பகுதியில் அல்லது வீட்டினுள் உள்ள சிறிய பகுதிகளில் என இடவசதிக்கு ஏற்றவாறு வீட்டுத்தோட்டம் அமைக்கலாம். பச்சை பசேலென பசுமை போர்த்திய இலைகள் நிறைந்த தாவரங்களும் அழகிய பல வண்ண நிற பூக்களும், நீங்கள் அமைதியற்று இருக்கும் சந்தர்ப்பங்களில் மன அமைதியினை தரக்கூடியது. அதுமட்டுமன்றி உங்களது ஓய்வான நேரங்களை இயற்கையோடு கழிக்கும் சந்தர்ப்பத்தினையும் வீட்டுத்தோட்டம் ஏற்படுத்தி தருகிறது. வீட்டுத்தோட்டத்தினை பேணி பாதுகாத்து பராமரிக்கும் போது உங்களுள் தானாகவே பொறுப்பும் பொறுமையும் துளிர்விட தொடங்கி விடும்.

### சிறிய, குறைவான அளவு பராமரிப்பு தேவையுடைய தாவரங்களை தெரிவு செய்யுங்கள்

பயிரிடும் தாவரங்களை கொல்லக்கூடாது என்பதே முக்கிய நோக்கம். கற்றாழை, அலோ வேரா, சான்சேவியா (பாம்பு தாவரம்), இசட் இசட் தாவரம், பீஸ் லில்லி மற்றும் போத்தோஸ் (பண தாவரம்) ஆகியவை மிகவும் இலகுவாக வளர்க்கக் கூடியவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. அவற்றிற்கு குறைந்த அளவிலான ஒளி மற்றும் நீர் போதுமானது. ஆகையால் நாம் அதிகளவிலான கவனத்தினை செலுத்தி பராமரிக்க தேவையில்லை. இவை வீட்டுத்தோட்டம் ஒன்றை தொடங்குவதற்கு சிறந்த தொடக்க தாவரங்களாக இருக்கும். சமையலறை மூலிகைகள் மற்றும் கீரை, தக்காளி, மிளகாய் போன்ற காய்கறிகளையும் முயற்சி செய்யலாம். ஆனால் ஒரு சில தாவரங்களுடன் தொடங்குவது முக்கியமான ஒன்றாகும். அவ்வாறு தொடங்குவதனால் நீர்ப்பாசன அட்டவணைகள் மற்றும் பராமரிப்பைக் கண்காணிப்பதற்கென பெரிதாக கவனம் செலுத்த வேண்டி இருக்காது.

### ஒளி தான் எல்லாமே!

வீட்டுத்தோட்டம் என்று வரும்போது சுற்றுச்சூழல் மிக முக்கியமானது. வீட்டுத்தோட்டத்திற்கான சரியான இடத்தினை ஒளி மற்றும் ஈரப்பதத்தின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து தெரிவு செய்யுங்கள். சூரிய ஒளி தான் உங்கள் வீட்டில் நீங்கள் வளர்க்கவிருக்கும் தாவரக்குழந்தைகள் தமக்கான உணவினை பெற்றுக்கொள்ளும் ஒரே ஓர் வழி. அவ்வாறு சரியானளவு சூரிய ஒளிகிடைப்பதால் அவர்கள் ஆரோக்கியமான, நறுமணமுள்ள அழகான குழந்தைகளாக வளர்ந்து செழிப்பார்கள். வீட்டு தாவரங்கள் நிழல் அல்லது மறைமுகமாக கிடைக்கக்கூடிய சூரிய ஒளியை விரும்புகின்றன. மேலும் பல வகையான கற்றாழை, சதைப்பற்றுள்ள



காய்கறிகள் மற்றும் பூச்செடிகள் போன்றன, பால்கனியில் அல்லது முற்றத்தில் கிடைக்கக் கூடிய பிரகாசமான நேரடி சூரிய ஒளியை விரும்புகின்றன. நீங்கள் தத்தெடுக்க விரும்பும் தாவரக்குழந்தைகளை பற்றி நீங்கள் ஏற்கனவே அறிந்திருத்தல் வேண்டும். உங்கள் தாவரத்தின் ஒளித் தேவைகளை அறிய சிறிது ஆராய்ச்சி செய்யுங்கள்.

### சரியான தாங்கிகளை தெரிவு செய்தல்

ஒரு தாவர நெர்சரியில் இருந்து தாவரங்கள் அல்லது நாற்றுகளை வாங்குவது



வீட்டுத்தோட்டத்தினை தொடங்குவதற்கான எளிதான வழியாக இருக்கலாம். அவை வீட்டிற்கு வந்ததும், அவற்றிற்கான சாடி



அல்லது நிலத்திற்கு மாற்றப்பட வேண்டும். பழங்கள் மற்றும் காய்கறிகளின் உலர்ந்த விதைகளையும் நீங்கள் பயிரிடலாம். இது நிலையானது, மலிவானது மற்றும் நம்பமுடியாத அளவிற்கு திருப்தி அளிக்க கூடியது. விதைகளை ஈரமான பருத்தி அல்லது துணியில் வைத்து, அவை முளைக்கும் வரை சூரிய ஒளியில் இருந்து விலக்கி பராமரிக்கவும். அதன் பின்னர் அது ஒரு நாற்றாக வளர ஒரு சாடியில் பயிரிடுங்கள். வேர் வளர்ச்சிக்கு இடமளிக்கும் வகையில் தாவரம் வளர்ந்து வரும் தற்போதைய பானையை விட, 2-4 அங்குல பெரிய கொள்கலனைத் தேர்வு செய்யவும். வேர் அழுகலைத் தடுக்க எப்போதும் கீழே வடிகால் துளைகளைக்கொண்ட கொள்கலன்களைத் தேர்ந்தெடுங்கள்.

### உங்கள் மண்ணை தயார்படுத்துங்கள்

வீட்டுத்தோட்டத்திற்கான மண்ணை பொறுத்தவரை, நீங்கள் ஒரு தாவர நாற்றங்கால் அல்லது கோகோ கரி மற்றும் ஆர்கானிக் உரம் கலந்த தோட்ட மண்ணிலிருந்து ஒரு சாடி மண் எடுத்து பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் மண்ணை அவ்வப்போது தளர்த்தவும், காற்றோட்டம் புகக்கூடிய வகையில் பராமரிக்க, நேரத்திற்கு நேரம் அவதானித்து சாடியில் தாவரத்தின் வேர்கள் சேதப்படாத வகையில் துளைகள் இடுங்கள். நீங்கள் அவற்றை நேரடியாக தரையில் நடுவதற்கு முடிவு செய்திருந்தால், மண்ணைத் தளர்த்தி, ஆர்கானிக் உரங்களை மண்ணோடு சேர்த்து உங்கள் தாவரத்திற்கான மண்ணை தயார் செய்யவும்.

### தேவைப்படும்போது மட்டும் நீர் பாய்ச்சவும்

விரலினைக் கொண்டு மண்ணின் ஈரப்பதத்தினை பரிசோதனை செய்யுங்கள். உங்கள் விரலின் முதல் ரேகை வரை மண்ணுள் இடுங்கள். முதல் அங்குலத்திலிருந்து அல்லது அங்குல அரை வரை மண் வறண்டிருந்தால் தண்ணீர் பாய்ச்சவும். ஈரமான இலைகள் பூஞ்சையை ஏற்படுத்துவதால் இலைகளைத் தவிர்த்து, தாவரத்தின் அடிப்பகுதியை நோக்கி நீர்ப்பாய்ச்சவும். இலைகளில் பழுப்பு நிற பகுதிகள் இருக்கின்றனவா என அவதானியுங்கள் ஏனெனில் இது மோசமான நீர்ப்பாசனத்தின் அறிகுறியாகும். மேலும், வழக்கமான நீர்ப்பாசன சுழற்சிகளில் அவதானமாக இருக்கவும். காலையில் ஒரு ஸ்பிரிட்ஸருடன் இலைகளை லேசாக ஈரலிப்பாக வைத்திருக்கவும்.

### உங்கள் தாவரத்தை பற்றி அறிந்து கொள்ளுங்கள்

நீங்கள் வளர்க்கும் ஒவ்வொரு தாவரத்திற்கும் உயிர் உண்டு. அவற்றினை உறவுகளாக பராமரியுங்கள். உங்கள் தாவரங்களைக் கேளுங்கள். அவர்களைக் கவனித்துப் பேசுங்கள். உங்கள் தாவரத்தின் தன்மை, நீர்ப்பாசனம் மற்றும் உரமிடுதல் அட்டவணைகளின் பதிவைப் பராமரிக்க தவறாதீர்கள். இது உங்கள் தாவரத்தின் தேவைகளை நன்கு புரிந்துகொள்ளவும், மகிழ்ச்சியாக வைத்திருக்கவும் உதவும். உங்கள் தாவரத்தை அன்புடனும் அக்கறையுடனும் அரவணைத்து பராமரியுங்கள். பொறுமையாக இருத்தல் மகிழ்ச்சியான, ஆரோக்கியமான உறவுகளை எவ்வாறு வலு செய்கின்றதோ, அதே போல் உங்கள் தாவரங்கள் வளர்வதற்கான நேரம் மற்றும் இடத்தினை அளியுங்கள்.



மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி :+94(77)2034807 +94 (77) 776 9751

# அரிசி இறக்குமதி தொடருமா?

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு முதற்கட்டமாக 10 ஆயிரத்து 400 மெற்றிக் தொன் அரிசி எதிர்வரும் 7 ஆம் திகதி இறக்குமதி செய்யப்படும். சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்கு எதிர்வரும் வாரத்துக்குள் தீர்வு எட்டப்படும் என அரச வாணிப கூட்டுத்தாபனத்தின் தலைவர்ரவீந்திர பெர்னாண்டோ தெரிவித்தார். சந்தையில் நிலவும் அரிசி தட்டப்பாட்டுக்கு தீர்வாக இந்தியாவில் இருந்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய முதலாவதாக விலைமனுகோரல் செய்யப்பட்ட 5200 மெற்றிக் தொன் அரிசி நாட்டை வந்தடைந்துள்ளது. இதற்கமைய எதிர்வரும் 7 ஆம் திகதிக்குள் 10400 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படும்.

இரண்டாம்கட்டமாக 28 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இம்மாதம் நடுப்பகுதியில் இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சந்தையில் நிலவும் அரசி தட்டுப்பாட்டுக்கு எதிர்வரும் வாரமளவில் தீர்வு எட்டப்படும்.

அரச கட்டமைப்பின் ஊடாக நாடு அரிசி மாத்திரமே இதுவரையில் இறக்குமதி செய்யப்படும். தனியார் துறையினர் சுமார் 80 ஆயிரம் மெற்றிக் அரிசி இறக்குமதி செய்துள்ளனர்.

இந்த நிலை நீடிக்கும் என்றால் இலங்கையில் உணவு தட்டுப்பாடு உருவாகும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கும் அத்தோடு விவசாயிகளுக்கான கடன்மற்றும்அவர்களது அடிப்படை தேவைகள் கூட நிர்வகிக்க முடியாத நிலை ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றது.

மிகவும் சிரமத்துக்கு மத்தியில் நெல் பயிர் சேர்க்கையில் ஈடுபடுகின்ற எங்களது விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் கவனத்தில் கொண்டு அரசு செய்யப்பட வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# ஆபிரிக்க நத்தைகள் ஆபத்தானவை



மனிதர்களில் மூளை மென்சவ்வு அழற்சியை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிப் புழுக்களை இவை காவித் திரிவதும் அறியப்பட்டுள்ளது. ஆபிரிக்க நத்தைகள் பயிர்ச்செய்கைக்கும், உயிர்ப் பல்வகைமைக்கும் அச்சுறுத்தலாக இருப்பதால் இலங்கை அரசாங்கம் இதனை அந்நிய ஊடுருவல் இனமாக அறிவித்துள்ளது.

ஆபிரிக்காவைத் தாயகமாகக் கொண்ட பெரும் நத்தைகள் சமீபத்தில் பெய்த பெருமழையின் பின்னர் பல பகுதிகளில் படையெடுக்க ஆரம்பித்துள்ளன. ஆபிரிக்கப் பெரும் நத்தைகள் (African Giant Snail- Lissachtina fulica) பிரித்தானியர் ஒருவரால் பின் விபரீதங்கள் புரியாமல் இலங்கைக்குள் எடுத்துவரப்பட்ட ஓர் அந்நிய இனம். ஒரு நத்தையிலேயே ஆண், பெண் இனப்பெருக்க உறுப்புகள் இரண்டும் இருப்பதால் இரண்டு நத்தைகள் சோடி சேரும் போது இரண்டுமே முட்டைகளை உருவாக்குகின்றன

இவை ஏற்கனவே இங்கு அவதானிக்கப்பட்டபோதும் இப்போது இவற்றின் பெருக்கம் அதிகமாக உள்ளது. பயிர்பச்சைகளையெல்லாம் தின்றுதீர்க்கும் இவை, உள்ளூர் உயிரினங்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதோடு நோய்களைப் பரப்பும் காவிகளாகவும் செயற்படுகின்றன.

இவற்றை இப்போதே கட்டுப்படுத்தத்தவறின் விரைவில் பேராபத்துகளை விளைவிப்பவையாக இவை அமைய

ஒரு நத்தையிலேயே ஆண், பெண் இனப்பெருக்க அமைப்புகள் இரண்டும் இருப்பதால் இரண்டு நத்தைகள் சோடி சேரும்போது இரண்டுமே முட்டைகளை உருவாக்குகின்றன.

சராசரியாக 5 தொடங்கி 6ஆண்டுகள் வரை வாழுகின்ற ஒரு நத்தை தன் ஆயுளில் 1000க்கும் அதிகமான முட்டைகளை இடுகின்றது. அந்நிய இனமான இவற்றை இரையாக்க இலங்கையின் இயற்கைச் சூழலில் இரைகௌவிகள் எதுவும் இல்லை.

இதனால் பல்கிப்பெருகி இப்போது ஓர் ஆக்கிரமிப்பு இனமாக உருவெடுத்துள்ளது. உலகின் உயிர்ப்பல்வகைமையின் அழிவுக்கு அந்நிய ஊடுருவல் இனங்களும் ஒரு பெருங்காரணமாக உள்ளது.

பகலில் மறைந்திருந்துவிட்டு இரவில் இரைதேடும் ஆபிரிக்க நத்தைகள் பயிர்கள், அலங்காரச் செடிகள், புல்பூண்டுகள் என்று எல்லாவற்றையும் தின்று தீர்த்து வருகின்றன. ஒரு தாவரத்தில் உள்ள நோய்க்கிருமிகளை இன்னொரு தாவரத்துக்குக் காவிச் செல்கின்றன.

இவற்றோடு மனிதர்களில் மூளைமென்சவ்வு அழற்சியை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிப் புழுக்களை இவை காவித்திரிவதும் அறியப்பட்டுள்ளது. ஆபிரிக்க நத்தைகள் பயிர்ச்செய்கைக்கும், உயிர்ப்பல்வகைமைக்கும் அச்சுறுத்தலாக இருப்பதால் இலங்கை அரசாங்கம் இதனை அந்நிய ஊடுருவல் இனமாக அறிவித்துள்ளது.

ஆபிரிக்க நத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் திணைக்களங்களுக்காகக் காத்திராமல் பொதுஅமைப்புகளும், பொதுமக்களும் முன்வரவேண்டும். உப்பு நீர்க்கரைசல் உள்ள பாத்திரம் ஒன்றில் இவற்றை அமிழ்த்துவதன் மூலம் சுலபமாக அழிக்க முடியும்.

ஆபிரிக்க நத்தைகள் நோய்க்காவிகளாகவும் இருப்பதால் வெறும் கைகளால் நேரடியாகத் தொடாமல் இலைகள், கடதாசிகள் போன்றவற்றால் இவற்றைப் பிடிப்பதே பாதுகாப்பானது.

இதனை ஒரு சமூகக்கடமையாகக்கருதி நாம் விரைந்து செயற்படவில்லையெனில் ஏற்கனவே பாரிய பொருளாதாரச் சீரழிவுக்கும், சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்கும் ஆளாகியிருக்கும் இலங்கை இந்நத்தையாலும் பெரும் சீரழிவுகளைச் சந்திக்கநேரும்.




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 2,04,850 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,23,450 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி** - பப்பாளி பயிர் செய்கையின் மூலம் லாபத்தை பெற்றுக் கொள்ளலாமா?



**பதில்:** ஆண்டு முழுவதும் பயிரிடலாம்

நன்றாக உழவு செய்து கடைசி உழவில் 4 டன் தொழுவுரம் இடவேண்டும். நல்ல வடிகால் வசதி உள்ள மண்.

கலர் உவர் மண்ணில் வராது. ஒரு ஏக்கருக்கு 1000 நாற்றுகள் தேவைப்படும். வரிவைக்கு வரிசை 7 அடி செடிக்கு செடி 7 இருக்க வேண்டும் . 25 வது நாள் ஒரு மரத்துக்கு 100 கிராம் டி.ஏ.பி போட வேண்டும். வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும் .

இவற்றிற்கு சொட்டு நீர் பாசனம் முறையை பயன்படுத்தலாம்

* அதிக அளவில் நீர் தேங்கி நிற்காத படி பார்த்துக்கொள்ள வேண்டும்

இவ்வாறு செய்வதனால் வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

1. சந்தைப்படுத்தல் வாய்பு 99% இருந்தால் மட்டும் முயற்சிக்கவும்.

2. மாற்றாரை நம்பி முயற்சிக்க வேண்டாம்.

3. உங்களுக்கு பூரண ஆர்வம். ஈடுபாடு இருத்தல் அவசியம்

4. நீங்கள் உற்பத்தி செய்யும் பொருளுக்கு நீங்கள் விலை நிர்ணயம் செய்யக்கூடிய வகையில் இருக்க வேண்டும்

நன்றி...



**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94(77)2034807**
**+94 (77) 776 9751**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 320/= |
| உருளைக்கிழங்கு | 340/= |
| பச்சை மிளகாய் | 300/= |
| தக்காளி | 380/= |
| மரவள்ளிக்கிழங்கு | 300/= |
| கோவா | 280/= |
| கரட் | 290/= |
| வாழைக்காய் | 260/= |
| சின்ன வெங்காயம் | 300/= |
| பாகற்காய் | 360/= |
| வெண்டிக்காய் | 200/= |
| பயற்றங்காய் | 180/= |
| பீற்றூட் | 220/= |
| முருங்கைக்காய் | 400/= |
| தேங்காய் | 160/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 192/= |
| கனடா டொலர் - | 207/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 313/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர்டொலர் - | 219/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 374/= |
| சுவிஸ் பிராங் - | 331/= |
| அமெரிக்க டொலர் - | 289/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 201/= |
| கனடா டொலர் - | 216/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 325/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 227/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 391/= |
| சுவிஸ் பிராங் - | 346/= |
| அமெரிக்க டொலர் - | 297/= |

**உதாலதான் முந்தி எங்கட ஆக்கள் கோயில்களுக்குப் போகேக்கை வெறும் காலோட நடந்து போகவேணும் அதமாதிரி கோயிலுக்குப் போனாலும் வீதியை மூண்டு தொடக்கம் ஒம்பது தரம் சுத்தி வரவேணும் எண்டிறவை. அது மாதிரி கோயிலுக்கு கோயில் பாத யாத்திரைகளும் போறவை. முந்தி எங்கட தெருக்களும் சரி கோயில் வீதிகளும் சரி கல்லு மண் புல்லு எண்டு நிறைஞ்சு கிடக்கும். அப்ப ஆக்கள் நடக்க நடக்க உந்த புல்லுகளும் கல்லுகளும் மண்ணுகளும் கால் பாதத்திலை அழுத்த அழுத்த நரம்புகள் ஒழுங்கா வேலை செய்யும். உதாலதான் முந்தி எங்கட பழைய ஆக்கள் வருத்தம் வாதை ஒண்டும் இல்லாம சுகதேகியளா சீவிச்சவை.**

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

இண்டைக்கு நடக்கப்போக செருப்போட வெளிக்கிட வீட்டம்மா உதென்ன செருப்போட ஆரும் நடக்கப் போவினமே. நான் உங்களோட வரேல்லை சுயாதீனமா நடக்கப்போறன் எண்டு பிரகண்டம் பண்ணிப் போட்டு பேந்தென்ன நினைச்சாவோ தெரியாது நடக்க வந்தா.

வீட்டம்மா போட்ட சத்தத்துக்கு வெளியில வந்தமகள் ஒருத்தி ஏனப்பா வெக்கம் இல்லையே. ஆரும் என்ன நினைப்பினம் சப்பாத்தோட போங்கோ எண்டாள். நான் அவளிட்டை மற்றறைவையின்ரை அபிப்பிராயங்களைக் கேட்டு நாங்க சீவிக்கேலாது. எங்கட சீவியத்தை நாங்கள் எங்கட பாட்டில சீவிக்கவேணும்.

ஆரும் சொல்லுகினம் எண்டு போட்டு ஆடேலாது எண்டன். முகத்துக்குத் தோத்து வேசையாடினால் குலத்துக்கு ஈனம் எண்டு எங்கட ஆச்சி நெடுகவும் சொல்லுறதுதான் ஞாபகத்துக்கு வந்தது.

மற்றவை என்னவுஞ் சொல்லுவினமோ எண்டு நினைச்சு நினைச்சே கனபேர் தங்கட சுயத்தை இழந்துவாழுகினம். அதால அவைக்கு கன இடைஞ்சல்கள் பிக்கல் பிடுங்கல்கள் எல்லாம் வந்திருக்குது. இப்பிடி சுயம் இழந்த ஆக்கள் அரசியல், ஆன்மீகம், இலக்கியம், பொதுவாழ்க்கை எண்டு எல்லா இடங்களிலும் இருக்கினம். அப்பிடி இருக்கேலாது எண்டன்.

சரி அது கிடக்க நான் செருப்போட ஏன் நடக்க வெளிக்கிட்டனான் எண்ட விசயத்தை உங்களுக்குச் சொல்ல வேணும். வேறை ஒண்டும் இல்லை எங்கட உடம்பில முக்கியமான கன தொகுதியள் எல்லாம் நெஞ்சறைக்கு கீழை வயிற்றறையில இருக்குது. சமிபாட்டுத் தொகுதி, இனப்பெருக்கத்தொகுதி, கழிவகற்றல்( சிறுநீரகம்) தொகுதி எண்டு முக்கியமான தொகுதியள் கிடக்குது.

இண்டைக்கு கனபேருக்கு இந்தத் தொகுதியள் ஒழுங்காக வேலை செய்யாததால கனவருத்தங்கள் வருகுது. இந்தத் தொகுதியளைக் கட்டுப்படுத்திற நரம்புகளின்ரை முடிவிடம் எல்லாம் ரெண்டு உள்ளங்கால் முழுவதும் பரவிக்கிடக்குது. இப்பிடி முள்ளுச் செருப்புப் போட்டுக்கொண்டு நடந்தால் அதில உள்ள முள்ளுகள் உள்ளங்காலிலை உள்ள நரம்பு முடிவிடங்களை அழுத்த அழுத்த நரம்புகள் ஒழுங்கா வேலை செய்ய அந்த அந்தத் தொகுதியள் எல்லாம் ஒழுங்கா வேலை செய்யும். அதால வந்த வருத்தம் வர இருக்கிற வருத்தம் எல்லாம் ஓடிப்போடும் எண்டு எங்கட அப்பு சொல்லுறவர்.

உதாலதான் முந்தி எங்கட ஆக்கள் கோயில்களுக்குப் போகேக்கை வெறும் காலோட நடந்து போகவேணும் அதமாதிரி கோயிலுக்குப் போனாலும் வீதியை மூண்டு தொடக்கம் ஒம்பது தரம் சுத்தி வரவேணும் எண்டிறவை. அது மாதிரி கோயிலுக்கு கோயில் பாத யாத்திரைகளும் போறவை.

முந்தி எங்கட தெருக்களும் சரி கோயில் வீதிகளும் சரி கல்லு மண் புல்லு எண்டு நிறைஞ்சு கிடக்கும். அப்ப ஆக்கள் நடக்க நடக்க உந்த புல்லுகளும் கல்லுகளும் மண்ணுகளும் கால் பாதத்திலை அழுத்த அழுத்த நரம்புகள் ஒழுங்கா வேலை செய்யும். உதாலதான் முந்தி எங்கட பழைய ஆக்கள் வருத்தம் வாதை ஒண்டும் இல்லாம சுகதேகியளா சீவிச்சவை.

இப்ப கோதாரி விழுவார் நாகரீகம் எண்ட பெயரில மண் றோட்டுகளைக் காப்பற் போட்டு மூடி கோயில் வீதியளை டைல்ஸ் போட்டு மூடிப் போட்டாங்கள். அது மட்டும் இல்லாமல் இப்ப கோயிலுக்கு போறவையும் கோயில் வாசல்வரை வாகனத்தில போய் இறங்குகினம் எண்டுவா ஆச்சி. நல்ல வேளை விட்டா குறுக்கால போவார் வாகனத்தோட மூலஸ்தானத்துக்குள்ளையே போடுவாங்கள். உவை பேந்தென்னண்டு வருத்தம் வாதை வராமல் சீவிக்கிறதுஎண்டுவா அவ . இப்ப விளங்குதே நான் என்னத்துக்கு முள்ளுச் செருப்போட நடந்தனான் எண்டு வீட்டம்மாவுக்கும் பெடி பெட்டையளுக்கும் விளக்கம் சொன்னனன் .



# சுற்றுச்சூழலை பாதுகாப்பது நமது கடமை

ஆத்மிகா ஞானரூபன்

**தாவரங்கள், பறவைகள், விலங்குகள், நீர் நிலைகள் ஆகியவற்றை நாம் மாசடையாமல் பார்த்துக் கொண்டால் இயற்கை நம்மையும் நம் வருங்கால சந்ததியையும் பாதுகாக்கும். சுற்றுச்சூழலை பாதுகாப்பது பற்றி இந்த கட்டுரையில் பார்க்கலாம்.**



சுற்றுச்சூழல் என்பது நம்மைச் சுற்றியுள்ள இயற்கைப்பரப்பாகும். இயற்கையானது காடுகள், கடல்கள் மற்றும் பல்வேறு நிலப்பரப்புகளையும் கொண்ட தாகும். அறிவியல் வளர்ச்சி எந்த அளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளதோ அதை பயன்படுத்தும் நாம் சுற்றுச்சூழல் மாசடையாமல் பார்த்து கொள்ள வேண்டும்.;

தாவரங்கள், பறவைகள், விலங்குகள், நீர் நிலைகள் ஆகியவற்றை நாம் மாசடையாமல் பார்த்துக் கொண்டால் இயற்கை நம்மையும் நம் வருங்கால சந்ததியையும் பாதுகாக்கும். சுற்றுச்சூழலை பாதுகாப்பது பற்றி இந்த கட்டுரையில் பார்க்கலாம்.

## நிலம்

‘அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல என்பதற்கிணங்க தோண்டத் தோண்ட வளங்களைக் கொடுக்கும் மண்ணில் தாவர இனங்கள் மட்டுமின்றி பல நன்மைகளை செய்யும் நுண்ணுயிர்கள் வாழ்கின்றன. நில உயிரினங்கள் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. நிலத்தில் கலக்கும் ஆலைக் கழிவுகளும், அணு கழிவுகளும், செயற்கை உரங்களும், பிற நச்சுப் பொருட்களும் நிலத்தின் தன்மையை மாற்றி விடுகின்றன. இதன் மூலம் பூமியுடன் தொடர்பு கொள்ளும் உயிரினங்கள் அனைத்தும் பாதிக்கப்படுகின்றன. நிலத்தில் விளையும் காய்கறிகளில் இந்த நச்சுத் தன்மை படர்வதால் மனிதனின் உடலிலும் கலந்துவிடுகிறது.



## நீர்

‘நீரின்றி அமையாது உலகு என்பார்கள். பூமியின் 75 சதவீதமான பரப்பு நீரினாலே சூழப்பட்டுள்ளது. இந்த நீரானது தொழிற்சாலைக் கழிவுகளை நீர்நிலைகளில் கொட்டுவதாலும், கிருமி நாசினிகளை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் போது அவை நீரில் கலப்பதாலும் மாசடைகின்றது. உலகுக்கு முக்கியமான நீரானது இன்று ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் என பலவிதமான நீர்நிலைகளும் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இவை வீடுகளாகவும், கட்டிடங்களாகவும் மாறியுள்ளன. ஆறுகள் எல்லாம் தொழிற்சாலைக் கழிவு நீர்க் கால்வாய்களாகவும், கடல் ஒரு மாபெரும் குப்பைத் தொட்டியாகவும் மாறி நீர் வாழ் உயிர்கள் மடிவதற்கு காரணமாகின்றன.

## காற்று

அனைத்து உயிர்களின் சுவாசத்திற்கு இன்றியமையாததாக விளங்கும் காற்று வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நச்சுப் புகையினாலே அதிகளவில் மாசுபடுகின்றது. தொழிற்சாலை மற்றும் வாகனங்களில் பயன்படுத்தப்படும் அதிகப்படியான எரிபொருள் பயன்பாடு காற்றை மாசுபடுத்தி சுவாசப் பிரச்சினை உள்பட பல நோய்களால் பாதிக்கப்படுகின்றன. அதுமட்டுமன்றி அமிலமழை, ஓசோனில் ஓட்டை என பல ஆபத்துகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. காற்றை சுத்தப்படுத்தும் காடுகளை அழிப்பதால் இந்த ஆபத்துகளை நாம் சந்திக்க வேண்டியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளால் சுனாமி, எரிமலை வெடிப்பு, வெள்ளம், வறட்சி முதலான உருவாகின்றன. ஆகவே சுற்றுச்சூழலை பாதுகாத்து நோய்க்காரணிகளின் தொற்றுக்கு ஆளாகாமல், சுற்றுச்சூழல் பற்றிய சிறு, சிறு செயல்களின் மூலம் நமது சுற்றுப்புறத்தைக் காக்கும் கடமை நம் அனைவருக்கும் உண்டு என்பதை நாம் உணர்வோம்.

# எங்கட வாழ்வியல்

## பார்வை 19



தமிழ்க்கவி

'ஒருநாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்
இருநாளைக்கு ஏலென்றால் ஏலாய்.- வருநாளில்
ஏன்னோ இடும்பை கூர் என்வயிறே
உன்னொடு வாழ்தலரிது, இது அவ்வையார் தன் பசியைப்பற்றி வருந்திப்பாடியது. இதே போல ரெட்டைப்புலவர்களும் தமது பசியில் சிவனை வைதிருக்கிறார்கள்.

' தேங்கு புகழ் நாங்கூர்ச் சிவனே அல்லாழி அப்பா
நாங்கள்பசித்திருக்கஞாயமோ?'என முடவர்ஆரம்பிக்கஇளையவரானகுருடர்– 'போங்காணும், கூறுசங்கு தோல் முரசு கொட்டோசை அல்லாமல் சோறுகண்ட மூழி யார் சொல்' என முடிக்கிறார். உணவு அவ்வளவில் பொகாமல் காலத்துக்கு காலம் மனிதர்களை ஆட்டிப்படைக்கிறது. உணவு கிடைக்கிறதே என்பதற்காக நான்கு நாட்களுக்கான உணவை உண்ண முடியாது. சரி இன்றைக்கு கிடைக்கவில்லைஎன்பதற்காகபட்டினியும் கிடக்க முடியாபது. அதேபோலதான் ரெட்டையர்களும் சிவனிடம் தங்கள் பசிக்கு நியாயம் கோர இளைவர் 'பாவம் சிவனுக்கே சங்கொலியும் முழவும் அல்லாமல் சோற்றை யார் கொடுப்பார் எனவே அவரும் பட்டினிதான் என கூறி பாட்டை நிறைவு செய்தார்.

நாம் இப்போது பேச விளைவது இந்த தண்ணீர் பற்றியதுதான். உணவு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நீரும். அதிலும் குடிநீர் சமையலுக்கும் தேவையான நீர்.இந்த நீரை வைத்துத்தான் பெரிய போராட்டங்களும் நடந்துள்ளன. இன்னும்உலகநாடுகளிடையேநடந்தும் வருகின்றன. எமக்கு அருகே உள்ள தென்னிந்தியாவில்காவிரிநீர்பெரியாற்று அணைநீர் என்பன பற்றிய சர்ச்சைகள் வெகுகாலமாக ஓடிக்கொண்டிருக்கிறது. என்றாலும் அது தீருகின்ற நிலையில் இல்லை. உலகம் நீரைச்சுற்றியே வைத்திருக்கிறது. என்றாலும் நீரின்றி அமையாது இவ்வுலகம் என்பதற்கு கடல்நீர் ஒப்புவமை இல்லை

உலகில் இயற்கை கொடுக்கும் முக்கிய வளங்கள் காற்று, நீர், நெருப்பு, ஆகாயம,;பூமி.ஏனபனஅனைவருக்கும் பொதுவானவை. ஊலகில் இவற்றை எனதுஎனஉரிமைகொண்டாடியஎவரும் இப்போது உலகில் இல்லை. இவற்றை எனது என்பவரைப் பார்த்து இயற்கை சிரிக்குமாம். உலகம் முழுதையும் வெல்ல நினைத்த அலெக்ஸாண்டரும் நெப்போலியனும். ஏங்கே? இருபது அக்குறோனி சேனைகளை பலியிட்டு மகாபாரதப் போரில் நிலத்தை வென்ற பாண்டவர்கள் எவ்வளவு காலம் அதை ஆட்சி செய்தார்கள்.

தாகத்தில் தவிக்கும் ஒருவருக்கு நாம் கொடுக்கும் நீர்?! நீரை நாம் கொடுப்பதா? நீரென்ன எனக்கோ மற்றவருக்கோ சொந்தமானதா? இருக்குமிடத்திலிருந்து நீரைப்பெற எல்லோரும்உரித்துடையவர்கள். காலக் கொடுமை யாழ்ப்பாண மக்களுக்கு குடிநீர் தேவைப்படுகிறது. அதை



கிளிநொச்சியிலிருந்து பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்கிறார்கள். இரண்டும் ஒரே பிராந்தியம் இரண்டிலும் வாழும் மக்கள் பெரும்பாலும் ஒரே இனமதகலாச்சாரம் உள்ளவர்கள். அப்படியானால் ஏன் தண்ணீர் விலக நினைக்கிறது. பற்றாக்குறை என்பது எப்படி ஏற்படுகிறது. இவர்கள் சொந்தம் கொண்டாடும்நீரைகடலுக்குள்விட்டாலும் விடலாமேயொழியயாழ்ப்பாணமக்களின் தாகம் தணிக்க தரமாட்டோம். ஏன்பது என்ன நியாயம் என்று எனக்கு தெரியவில்லை.

அதுதான் நான் உணவைப்பற்றி பேசியதன் தொனிப் பொருள் மழை பெய்கிறது அதில் களங்கமில்லை. மழைநீரைத்தேக்கிவைக்க பலகுளங்கள் உள்ளன. அதிலும் குறைபாடில்லை. ஆனால் குளங்களை அடுத்து வெள்ளம் பெருகி ஏராளமான நீர் கடலை அடைகிறது. அதை சரிவர வெள்ள ஆளுமை செய்ய வெள்ளாள மக்கள் முனையவில்லை. யாழ்ப்பாணத்துக்கு தண்ணீர்போனால்தமதுபயிர்வாடிவிடும் என்றபயப்பிராந்தியிலேயேவாழ்கிறார்கள். இவர்களது குளங்களின் நீரின் கொள்ளளவு எவ்வளவு குறைந்து விட்டது என்பதை அவர்கள் கவனித்தார்களா? அதற்காக ஏதும் குரல் கொடுத்தார்களா? கண் முன்னாலேயே களவாடப்படும் நீர்த்தேக்கங்களையும், ஏரிகளையும் இவர்களுக்கு தெரியவில்லையா? ஒவ்வொரு மக்களையும் கேட்கிறேன். உங்கள் பிரதேசக் குளங்களை துர் வாரி எவ்வளவு காலம். உங்கள் பிரதேச குளங்களின் அலைகரையில் தினசரி கொட்டப்படும் மண் எவ்வளவு? உங்கள் குளத்தின் கொள்ளளவு விஸ்தீரணம் என்ன? தேடுங்கள் பல திடுக்கிடும் தகவல்கள் வரலாம்.



மக்களை மாக்களாக மாற்றுவது எது என்பது தெரியவில்லை. இப்போது இதற்கு மாற்றீடாக போடப்படும் திட்டம் பெருமளவு விவசாய நிலங்களையும் காடுகளையும் விழுங்கிவிடுமாம் சொல்கிறார்கள். இதைத்தான் சொல்வது கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவது. என்று. வீணாகப்போய்க் கொண்டிருக்கும் நீரில் பாதியளவே தேவைப்படும் யாழ்ப்பாண மக்களுக்கு நீர் வழங்க வேண்டும். கோடிக்கணக்கான செலவில் குழாய்கள் போட்டிருந்தும் அதில் காற்றேவருகிறது என்றால் மனிதமனம் உள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மக்கள் தொகை குறைந்து கொண்டே போனாலும். யந்திரமயமானவளர்ச்சியில் சிக்கித்தவிக்கிறது யாழ்ப்பாணம். பெருகிவரும் கட்டடக்காடுகள் வானத்தின் முகட்டைத்தொட எழுகின்ற போது நிலத்தடி நீரின் தேவை மிகையாகிறது. சுத்தமான குடிநீர் அருந்தலாகிறது. குறிப்பாக தீவுப்பகுதிகளில் மக்கள் வாழ்வதை நான் அதிசயமாகப் பார்க்கிறேன். தினசரி அவர்களுக்கு குடிநீர் தொலைவிலிருந்து வருகிறது. கிணற்று நீர் பெரும்பாலும் உப்புக்கரிக்கிறது.



பண்டைக்காலத்தில் யாழ்ப்பாணம் சாயவேர்தொழிலில்நிறையசம்பாதித்தது. அதன் தாக்கமாக இன்றும் தென்மராட்சி வடமராட்சிப்பகுதிகளில் கிணறுகள் ஆழமாக இருந்தாலும் காவிநிறமாகவோ வெள்ளை நிறமாகவே ஊற்று நீர் இருக்கும். எங்கோ தொலைவிலிருந்து வரும் தண்ணீர் வண்டிகளிலிருந்து குடிநீரைப்பெறுவதைக்காணலாம். அப்படி வராத நாட்களில் கோயில் கிணற்றடியில் தண்ணீருக்காக பல குடங்கள் காத்து நிற்கும். இன்று நேற்றல்ல யாழ்ப்பாணம் நீருக்காக அலைந்தாலும் கோவில் கிணறுகள் பெரும்பாலும் நந்நீரைக் கொண்டுள்ளன.

எல்லா இடங்களையும் போல எல்லோரும் அள்ளிப் புழங்கும் கிணறுகள் யாழ் மண்ணில் இல்லை. அவர்களுடைய கவுரவம் கிணற்று நீரில் பெரும்பாலும் தங்கிநிற்கும் துலாக்கொடியை எல்லோரும் பிடிக்க முடியாது. தோட்டத்துக்கு நீரூற்ற வமு; கூலியாளும் கிணற்றிலிருந்து நீரை அள்ளும் உரிமையை கொடார்கள். அப்படியான மண்ணிலிருந்து வெளியேறிய ஏராளமானவர்கள் சமத்துவமாக வாழும் வன்னியில் மழைகாலத்தில் சேமிக்க முடியாமல் வீணாகும்நீரைதாகம்தீர்க்ககொடுத்தால் நாமும் வாழ்வோம் அடுந்த நகரமும் வாழும்.

# அரசின் நீண்டகால நிதி மற்றும் பொருளாதார நோக்கங்கள்

## புதிய வாகன இறக்குமதி மற்றும் நாணய மேலாண்மைக் கொள்கைகள்

**இலங்கை அரசாங்கம் வாகன இறக்குமதி விதிமுறைகளின் மூலம் நாணய நிலைத்தன்மையை உறுதி செய்ய மட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நீண்டகால அடிப்படையை அமைக்க வேண்டும். இதற்கான சில முக்கிய அம்சங்கள்:**



1. வெளிநாட்டு நாணயக் கையிருப்பின் நிலைத்தன்மை:

வெளிநாட்டு நாணயக் கையிருப்புகளை நீண்ட காலத்திற்கு உறுதிப்படுத்த மொத்த இறக்குமதிகளை கட்டுப்படுத்தி, அதனை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிக முக்கியம். இத்தகைய விதிமுறைகள் வாகனப் பிறப்பித்தல்களின் வெகுஜனத்தையும் வருகையையும்நிர்வகிக்கஉதவுவதோடு,நாட்டின் பொருளாதாரத்தில் சரியான செறிவூட்டத்தை உருவாக்கும்.

2. நாட்டு உற்பத்தி மற்றும் உள்ளூர் பொருளாதார ஆதரவு:

அதிக அளவு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் போது அது நாட்டின் உள்ளூர் தொழில்துறைகளுக்கு போட்டியாக மாறுவதற்கான வாய்ப்பு உள்ளது. இதனைத் தவிர்க்கும் விதமாக, அரசாங்கம் உள்ளூர் உற்பத்தித்துறைகளைஊக்குவிக்கும்வகையில் உதவிகளை அளித்து, இறக்குமதி சாரா வளர்ச்சி முறைமைகளை உருவாக்கவேண்டும்.

3. சுற்றுச்சூழலுக்கு உகந்த நடவடிக்கைகள்:

மின்சார வாகனங்களை ஊக்குவிப்பதன் மூலம், எரிபொருள் சார்ந்த வாகனங்களின் பயன்பாட்டை குறைத்து, சுற்றுச்சூழல் மாசடைதலைத்தடுக்கமுடியும். இதற்காகநாட்டில் சரியானமின்சார சார்ஜிங் நிலையங்கள் மற்றும் பராமரிப்பு சேவைகளை மேம்படுத்துவதன் மூலம், மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்க முடியும்.

4. தொழில் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகள்:

வாகன இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் உருவாக்கப்படும் புதிய கொள்கைகள், தொழில்வளர்ச்சிக்கும்வேலைவாய்ப்புகளுக்கும் ஆதரவுதரும். தொழில்துறைக்கு தேவையான தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கவும், புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கவும் இது உதவும்.

இலங்கை அரசின் புதிய வாகன இறக்குமதி கொள்கைகள் மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகள் பொருளாதாரத்தை நிலைத்துறையாக்கி, வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் ஆகும். சரியான முறையில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டால் இந்தக் கொள்கைகள் நாட்டின் நாணய நிலையை கட்டுப்படுத்தி வாகன வர்த்தகம் மற்றும் பொதுமக்கள் நலனையும் ஒன்றிணைத்து இலங்கையின் நீண்டகால பொருளாதார சீரமைப்பில் முக்கிய பங்காற்றும்.

### பிராந்திய மற்றும் சர்வதேச எதிர்பார்ப்புகள்:

இலங்கையின் பொருளாதார சீரமைப்பில் வாகன இறக்குமதி கொள்கைகள் மற்றும் வெளிநாட்டுநாணயமேலாண்மைவெற்றிகரமாக அமைய வேண்டும் என உலகளாவிய நிதி நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர். சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் உலக வங்கி போன்ற அமைப்புகளின்நிதிஆதரவைப்பெற, இலங்கை அரசு இந்தக் கொள்கைகளை முழுமையாக நிறைவேற்றுவது அவசியமாகின்றது.

### சர்வதேச நம்பிக்கையை பெறுதல்:

1. IMF மற்றும் உலக வங்கி உறவுகளை வலுப்படுத்தல்:

IMF நிபந்தனைகள் மற்றும் சர்வதேச நிதி ஒப்பந்தங்களைப் பின்பற்றுவதன் மூலம்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கை சர்வதேச நிதி ஆதரவை தொடர்ந்து பெறும். இதனால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வங்கிகளின் நம்பிக்கையைப் பெறுதல் எளிதாகும். மேலும் இலங்கை பொருளாதாரத்திற்கு உறுதிப்பாடுகளை உருவாக்கும்.

2. வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவித்தல்:

சர்வதேச நம்பிக்கையைப் பெறுவது நாட்டில் முதலீட்டை அதிகரிக்க முடியும். இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, தொழில், சுற்றுலா மற்றும் உட்கட்டமைப்பு துறைகளுக்குதேவையானவாகனங்கள்மீதான தடைகளை நீக்குவதன் மூலம், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் புதிய வர்த்தகங்களை நாட்டிற்கு கொண்டு வர முடியும்.

### அரசின் செயல்திறன் மற்றும் பொறுப்புள்ள நடவடிக்கைகள்:

வாகன இறக்குமதி கொள்கைகள் மற்றும் மற்ற நிதிச் சீர்திருத்தங்களை சரியான முறையில் நடைமுறைப்படுத்த அரசாங்கம் பொறுப்புள்ளமற்றும்திறமையானசெயற்றிறன் கொண்டதாக இருக்க வேண்டும். பொதுமக்கள் மற்றும் வணிகத்துறைகளின் தேவைகளை எதிர்பார்க்கும்வகையில்திட்டங்களைஉருவாக்கி அதனை விளக்குவதன் மூலம் பொருளாதார மாற்றங்களைச் சரியாகக் கொண்டு செல்ல

முடியும்.

## சமூக விளைவுகள்:

வாகனக் கட்டுப்பாடுகள் மற்றும் அபராத விதிமுறைகள், இடைக்காலத்தில் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு சில சிரமங்களை ஏற்படுத்தும். ஆனால், இதன் நீண்டகாலப் பயன்கள் பொருளாதாரத்தில் நிலைத்தன்மையையும், பொருளாதார வளர்ச்சியையும் உறுதி செய்யும். அரசாங்கம் மக்கள் எதிர்வினைகளை கவனித்து, சமூக நலனைக் கருத்தில் கொண்டு திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

இலங்கை அரசின் வாகன இறக்குமதி மற்றும் வெளிநாட்டு நாணய மேலாண்மைக் கொள்கைகள் சர்வதேச நிதி ஆதரவை உறுதிப்படுத்தவும், பொருளாதாரத்தில் நேர்மறை மாற்றங்களை ஏற்படுத்தவும் முக்கியமானதாக இருக்கும். சரியான செயற்றிறனுடன் செயற்பட்டால், இந்தக் கொள்கைகள் நாட்டின் பொருளாதார நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும், நீண்டகால வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைக்கும், மேலும் இலங்கை மக்களுக்கும் வர்த்தகத் துறைக்கும் சாதகமானதாக அமையும்.

## நீண்டகால பொருளாதார வெற்றிக்கான அடிப்படை:

இலங்கையின் புதிய வாகன இறக்குமதி மற்றும் நாணய மேலாண்மைக் கொள்கைகள் நாட்டின் நீண்டகால பொருளாதார வெற்றிக்கான அடிப்படையாக அமையும். சரியான உத்திகள், திட்டமிடப்பட்ட நிதிச் செயல்திறன் மற்றும் பொறுப்புள்ள அரசாங்க செயல்பாடுகள், பொருளாதாரத்தை நிலைத்திருக்கச் செய்யும்.

1. உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தல்: வாகன மற்றும் தொழில் உற்பத்தி ஆகிய துறைகளில் உள்ளூர் முதலீடுகளை ஊக்குவிக்க, அரசாங்கம் சிறப்பான கொள்கைகளை மேற்கொள்ள வேண்டும். உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி முன்னேற்றங்களின் மூலம் இறக்குமதியிலிருந்து உற்பத்தித் துறைக்கான மாற்றம் நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்தும்.

2. புதிய தொழில் வாய்ப்புகள்: வாகன உற்பத்தி மற்றும் பசுமை தொழில்நுட்பங்களில் அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும். இதனால் நாட்டின் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும்.

3. நாட்டின் பொது நிதி நிலைத்தன்மை: வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் புதிய வரிகள், அரசுக்கு வருவாய் ஏற்படுத்தி பொது நிதியை மேம்படுத்தும். இதனால் நாட்டின் நிதிச் சுமைகளை குறைத்து, பொருளாதாரத்தில் நேர்மறையான தாக்கத்தை உருவாக்க முடியும்.

## சமூக நன்மைகள் மற்றும் சனநாயக பொருளாதார முன்னேற்றம்:

இலங்கை அரசின் புதிய கொள்கைகள் பொது நன்மைகளையும், பொருளாதார வளர்ச்சியையும் நம்பிக்கையுடன் முன்வைத்திருக்கின்றன. அதேசமயம், பொதுமக்கள் நலனைப் பிரதிபலிக்கும் விதமாக, சரியான சமூக நன்மைகளை உறுதிப்படுத்துவது அரசின் முக்கிய நோக்கமாகும்.

1. சுற்றுச்சூழல் மற்றும் பசுமை வழிமுறைகள்: மின்சார வாகனங்களை ஊக்குவிப்பது சுற்றுச்சூழலுக்கு உகந்த தீர்வாகும். இது எரிபொருள் சார்ந்த மகசூலை குறைக்கின்றது, அதேசமயம், சுத்தமான மற்றும் குறைவான மாசு உருவாக்கும் போக்குவரத்து முறைகளுக்கு ஆதரவு அளிக்கின்றது.

2. தொழில் மற்றும் வளர்ச்சி வாய்ப்புகள்: புதிய தொழில்நுட்பங்களில் நாட்டின் உள்ளூர் தொழில்களை ஊக்குவிக்க, அரசாங்கத்தின் முன்னெடுப்புகள் முக்கியமானதாகும். இதனால் தொழில்வாய்ப்புகள் அதிகரித்து, உள்நாட்டு உற்பத்தியில் நீண்டகால வளர்ச்சி காணப்படும்.

இலங்கை அரசின் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் நாணய மேலாண்மை நாட்டின் பொருளாதாரத்தை நிலைத்த உருவாக்கத்தின் பாதையில் கொண்டு செல்லும் தீர்மானங்கள் ஆகும். சர்வதேச நிதி ஆதரவைப் பெறவும், நாட்டின் பொதுமக்கள் நலனையும் பொருளாதார வளர்ச்சியையும் உறுதிப்படுத்தவும் இந்த கொள்கைகள் சிறந்த முடிவாக அமையும். சரியான முறையில் துறைகளுக்கு ஏற்ப மாற்றங்களையும் நவீன முறைகளையும் உருவாக்கும் இந்த நடவடிக்கைகள் இலங்கையின் நீண்டகால பொருளாதார வெற்றிக்கு அடிப்படையாக அமைந்து நாட்டு மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் வளமான எதிர்காலத்தை உருவாக்கும்.

## சமூக மற்றும் பொருளாதார அடிப்படையில் எதிர்கால இலக்குகள்:

இலங்கை அரசின் வாகன இறக்குமதி மற்றும் நாணய மேலாண்மைக் கொள்கைகள் நீண்டகால பொருளாதார வளமாகவும் சமூக நன்மைகளையும் முன்னிலைப்படுத்தும் திட்டமாகவும் செயல்படும். இந்தக் கொள்கைகள் பொருளாதாரத்தின் நிலைத்தன்மையையும், சமூகத்தின் நன்மைகளையும் பேணும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

1. சமூக நலம் மற்றும் பயனாளிகளின் நம்பிக்கை: இந்த கொள்கைகள் பொதுமக்களுக்கும் வணிகத்துறைக்கும் ஒரே நேரத்தில் நன்மைகளைத் தரும். பொதுமக்கள் நலனையும் பொருளாதார நிலைத்தன்மையையும் பாதுகாப்பதன் மூலம் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை அதிகரிக்கலாம்.

2. வளர்ச்சிக்கான முதலீடுகளை ஈர்க்கும் தன்மை: சர்வதேச நிதி ஆதரவு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டில் பொருளாதார நம்பகத்தன்மையை உணர்ந்தால் அடுத்தடுத்து அதிக முதலீடுகளை நாட்டிற்கு ஈர்க்கும். இவ்வகையான முதலீடுகள், தொழில், சுற்றுலா, உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் நீண்டகால பயன்களை வழங்கும்.

3. புதிய தொழிநுட்பங்கள் மற்றும் தொழில்களுக்கான அடித்தளம்: பசுமை தொழில்நுட்பங்களின் ஊக்குவிப்பு, மின்சார வாகன உற்பத்தி மற்றும் அதனுடன் தொடர்பான தொழில்நுட்ப மேம்பாடு ஆகியவற்றில் இலங்கை முன்னேறிய நாடாக மாறும். இவ்வாறான புதிய தொழில்நுட்பங்களில் முதலீடு செய்வது நாட்டின் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும், பொருளாதார வளத்தை உருவாக்கவும் உதவும்.

## சர்வதேச நிதி ஆதரவைப் பெறும் வலிமையான பொருளாதார நடவடிக்கைகள்:

சர்வதேச நிதி ஆதரவைப் பெறுவதற்கான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யும் வகையில், இலங்கை அரசு சீரிய பொருளாதார சீர்திருத்தங்களை முன்நோக்கி செயல்படுத்தி வருகின்றது. ஞானிய் மற்றும் உலக வங்கி உள்ளிட்ட அமைப்புகளின் நம்பகத்தன்மையைப் பெற்று, பொருளாதாரத்தை மேம்படுத்தவும் சரியான விதிமுறைகளை நடைமுறைப்படுத்தவும் இவை உதவுகின்றன.

## மூன்றாம் கட்ட வளர்ச்சிக்கு இலங்கையின் திட்டமிடல்:

நாடாளுமன்றம் மற்றும் அரசு நிர்வாகத்தில் இத்தகைய திட்டமிடல்களை செயல்படுத்துவதன் மூலம், நாட்டின் நம்பகமான பொருளாதார வளர்ச்சி பாதையில் பயணம் தொடரும். சரியான முறையில் அமைக்கப்பட்ட கோட்பாடுகள், நாட்டின் பொருளாதாரத்தை உற்பத்தித் திறனை மேம்படுத்தும் வகையில் செயல்படத் தொடங்கும்.

## நிகழ்காலத் தேவைகள் மற்றும் எதிர்கால இலாபங்கள்:

இலங்கையின் தற்போதைய பொருளாதார சூழலில் வாகன இறக்குமதிக்கான முறையான கட்டுப்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நாணய மேலாண்மைக் கொள்கைகள் நாட்டின் பொருளாதார நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் பொறுப்பான நடவடிக்கைகளாகும். அதேசமயம், எதிர்கால வளர்ச்சிக்கான ஒரு நம்பகமான அடித்தளமாகவும் இது அமையும். அமுல்படுத்தப்பட்ட இந்த புதிய வாகன இறக்குமதி மற்றும் நாணய மேலாண்மைக் கொள்கைகள், இலங்கையின் பொருளாதார நிலைத்தன்மை, சமூக நன்மை மற்றும் நீண்டகால வளர்ச்சியைத் துணைபுரிந்து, நாட்டின் பொதுமக்களுக்கும் வணிகத்துறைக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும்.

# நவீன விவசாயம் தரும் நன்மைகள்

அமுதன்



மரபுதொட்டு காணப்பட்ட பண்டைய விவசாயம் முறைகள் இன்று எமது சமூகத்தில் இருந்து படிப்படியாக குறைவடைந்து நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக உயிரின் ஆதாரமாகிய விவசாயத்துறையும் பல்வேறு முன்னேற்றங்களையும், வளர்ச்சியையும் கண்டு வந்துள்ளது. இவ்வாறான வளர்ச்சியே நவீன விவசாயம் எனப்படுகின்றது.

இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் பங்களிப்பு வழங்கும் பிரதான துறையில் ஒன்றாக விவசாயத்துறை அமைந்துள்ளது, கிராமிய மக்களின் வாழ்வாதாரம் மற்றும் தொழில் நிலைக்கு முக்கியமானதாக இது உள்ளது.

எவ்வாறாயினும், சேவைகள் துறை மற்றும் விவசாயத்துறை உறுதியான அபிவிருத்தியைப் பதிவு செய்திருந்த போதிலும், விவசாயத்துறை சார் பொருளாதாரம் பின்னடைவை எதிர்கொண்டுள்ளதுடன், இதனூடான வருமானம் வீழ்ச்சியடைந்த வண்ணமுள்ளது. விவசாயத்துறை எதிர்கொள்ளும் சவால்கள் காரணமாக, கொள்கை வடிவமைப்பாளர்களிடமிருந்து துரித கவனத்தை ஈர்த்துள்ளது. துறையின் வளர்ச்சி, நவீன மயமாக்கலுக்குத் தீர்வுகள் கண்டறியப்பட வேண்டியுள்ளதுடன், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தல், கிராமிய வருமானத்தை அதிகரித்தல், ஏனைய துறைகளை நோக்கிச் சீரான மாற்றம் போன்றவற்றை இலக்காகக் கொண்டு, இந்தத் தீர்வுகள் அமைந்திருக்க வேண்டும்.

ஒரு நாட்டினுடைய முதுகெலும்பாக காணப்படும் விவசாயம் என்பது விளைநிலங்களில் உணவுக்காகவும் பிற தேவைக்காகவும் தானியங்கள், பயிர்கள் என்பவற்றை உற்பத்தி செய்வதோடு, கால்நடை வளர்ப்பு ஆகியவற்றை இணைத்ததாகவே காணப்படுகின்றது.

இந்த விவசாய துறையானது இன்று பல்வேறு காலகட்டங்களைக் கடந்து நவீன விவசாயத்தில் சிறப்புற்று விளங்குகின்றது.

### விவசாயத்தின் முக்கியத்துவம்

இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனதும் அத்தியாவசிய தேவையான உணவை வழங்குவதாகவே விவசாயம் காணப்படுகின்றது.

அதாவது ‘படைத்தவன் மட்டுமே இறைவன் அல்ல மற்றவர் பசிக்காக உழைப்பவனும் இறைவன்தான்’ என்று கூற்றுக்கு அமைவாக விவசாயம் எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதைக் காண முடிகிறது.

மேலும் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் விவசாயம் செல்வாக்குச் செலுத்துகின்றது.

### நவீன விவசாயத்தில் தொழில்நுட்பதின் பங்கு

ஆரம்ப காலங்களில் இயற்கையான முறைகளைக் கொண்டு மண்ணைப் பயன்படுத்தி செய்யப்பட்ட விவசாய முறையானது இன்று தொழில்நுட்பத்தின் வளர்ச்சியினால் பாரிய மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது.

கூலியாட்களின் பற்றாக்குறை, நீர் பற்றாக்குறை போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வாகவே இந்த நவீன விவசாய முறைகள் காணப்படுகின்றன.

இதில் மண்ணைப் பதப்படுத்துதல், நாற்றுகள் நடுதல், களை அகற்றுதல், உரமிடுதல் மற்றும் பயிர் அறுவடை செய்தல் போன்ற அனைத்து செயல்பாடுகளும் இன்று தொழில்நுட்பத்தின் உதவியோடு இயந்திரங்கள் மூலம் செய்யப்படுகின்றன.

### நவீன விவசாயத்தின் நன்மைகள்

நவீன விவசாய முறைகளில் தொழில்நுட்ப இயந்திரங்களின் பயன்பாட்டினால் நேர முகாமைத்துவம் பேணப்படல், வேலையாட்களின் தேவை குறைவடைதல், குறைந்த காலத்தில் அதிக விளைச்சல் பெறுதல்,

சிறந்த நீர்ப்பாசன முறை மற்றும் குறைந்த நேரத்தில் அதிக வேலைகளை செய்தல் போன்ற பல்வேறு நன்மைகளை நவீன விவசாயத்தின் மூலம் மக்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

### நவீன விவசாயத்தின் தீமைகள்

நவீன விவசாய முறைகளில் நன்மைகள் இருப்பது போலவே தீமைகளும் காணப்படவே செய்கின்றன.

அந்த வகையில் அதிகமான விளைச்சலைப் பெரும் நோக்கில் அதிகமாக இரசாயன பதார்த்தங்களை விவசாயத்தில் பயன்படுத்துவதனால் மனிதனின் உடல் ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவிக்க கூடிய நோய்கள் ஏற்படுதல், விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகள் நீர்நிலைகளில் கலப்பதனால் நீர் நச்சுத்தன்மையாகுதல், நீர் வாழ் உயிரினங்கள் உயிரிழத்தல் மற்றும் பயிர் நிலங்கள் வளம் குன்றுதல் போன்ற பல்வேறு தீமைகளும் நவீன விவசாயத்தில் உள்ளன.

பண்டைய காலம் தொட்டு இன்று வரைக்கும் வளர்ந்து வரும் விவசாய துறையானது சனத்தொகை அதிகரிப்பின் காரணமாக நவீன விவசாயமாக இன்று மாற்றம் கண்டுள்ளது.

இந்த விவசாயமானது அனைத்து மக்களாளும் மதிக்கப்படக்கூடிய ஒன்றாக இருப்பதோடுஇ நவீன விவசாயத்தின் நன்மை, தீமைகளையும் நாம் அறிந்து செயற்பட வேண்டும்.

# மண்ணை காப்பது மனிதனின் கடமை!

எஸ். வினோஜா

**இயற்கையான மண்ணரிப்பு எனும்போது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் அதிகளவான மழை பொழிகின்றசந்தர்ப்பத்தில் அதன் பருமன் நிலத்தில் விழும்போது மண்ணானது நீரோடு அடித்து செல்லப் படுகின்றது.**

இன்று உலகளாவியரீதியில் இடம்பெறுகின்ற முக்கிய சூழல் பிரச்சினைகளில் ஒன்றாகவே மண்ணரிப்பு காணப்படுகின்றது.

அதிகரித்த சனத்தொகை, காடழிப்பு, இயற்கை அனர்த்தங்கள் என்பவற்றினால் மண்ணரிப்பு தவிர்க்க முடியாததாக மாறிவிட்டது என்றால் மிகையாகாது.

மண்ணரிப்பு எனப்படுவது நிலத்தில் இருந்துமேல்மண்நீரினாலும்காற்றினாலும் அரித்து செல்வதை குறிக்கும் இது 450 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடைபெற்றுவரும் ஒரு இயற்கை விடயமாக உள்ளது.

ஆனால், தற்போது மனிதனின் நடவடிக்கைகளால் மண்ணரிப்பு துரிதமாக இடம்பெற்றுவருகின்றமையே உலகளாவிய ரீதியில் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இம் மண்ணரிப்பு சமதரையிலும், சாய்வான பகுதியிலும் அதிகளவில் இடம்பெறுகின்றது.

இயற்கையானமண்ணரிப்புஎனும்போது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் அதிகளவான மழை பொழிகின்ற சந்தர்ப்பத்தில் அதன் பருமன்நிலத்தில்விழும்போதுமண்ணானது நீரோடு அடித்து செல்லப்படுகின்றது.

இதனால் மண்ணரிப்பு ஏற்படுகிறது. மேலும் ஒரு பிரதேசத்தில் காணப்படும் நதி நீரின் கொள்ளளவு அதிகரிக்கும்போது அந்த நீரானது அயற் பகுதியில் உள்ள மண்ணையும் சேர்த்து எடுத்து செல்கிறது இதன் மூலமும் மண்ணரிப்பு நிகழ்கின்றது.

கடற்கரையோரத்தில் அலைகளின் தொழிற்பாடு காரணமாக தின்னல் செயற்பாடு தீவிரப்படுத்தப்படுகின்றது. இதனால் கரையோரத்தில் உள்ள மண் அரிதல் நிலைக்கு உள்ளாகிறது.

குறிப்பாக, இலங்கையில் தென்பகுதி கடற்கரையில் 685 கிலோமீட்டர் பரப்பு கரையோரம் மண்ணரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி தாவரங்கள் அருகியுள்ள பகுதியிலும் காற்றின் தீவிர தன்மையால் மண்ணானது ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு எடுத்து செல்லப்படுகின்றது. இதனாலும் மண்ணரிப்பு இடம்பெறுகின்றது.

எல்லா இயற்கை செயற்பாடுகளிலும் மனிதன் தலையிட்டு அதை மிகைப்படுத்தி விடுகின்றான்என்பதுயாரும்மறுக்கமுடியாத உண்மை. அதிகரித்த சனத்தொகைக்கு ஏற்ப இன்று காடழிப்பும் துரிதமாக இடம்பெற்ற வண்ணமே இருக்கின்றது. இதன் காரணமாக மண்ணை தாங்கி பிடிக்க பிடிமானம் அற்ற நிலை உருவாகின்றது.

இதனால் மண்ணரிப்பு இயற்கைக்கு புறம்பாகமிகவும்துரிதமாகஇடம்பெறுகின்றது.

மேலும்மக்கள்மலைப்பாங்கானஉயர்ந்த பிரதேசங்களில் கட்டடங்களை அமைத்து வாழ்கின்றனர். அவ்வாறு குடியிருப்புகளை அமைக்கும்போது தாவரபோர்வைகள் வெட்டிஅகற்றப்படுகின்றமையால்சாய்வான பகுதிகளில் அதிகளவில் மண்ணரிப்பு இடம்பெறுகின்றது.

அதுமட்டுமன்றிதொழில்நோக்கம்கருதி இடம்பெற்று வரும் அளவுக்கு அதிகமான மந்தை மேய்ப்பு நடவடிக்கைகள், அகழ்வு நடவடிக்கைகள், பாதுகாப்பற்ற விவசாய முறைகள் போன்ற பொறுப்பற்ற மனித நடவடிக்கைகளால் மண்ணரிப்பு வேகமாக நடைபெறுகின்றது.

நம்மால்இயற்கைக்குபாதிப்புஏற்படுவது எந்தளவு உண்மையோ அதனால் ஏற்படும் விளைவும் நம்மையே வந்து சேரும் என்பதும் அதே அளவு உண்மை. நாம் இயற்கைக்கு எதிராக செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் இயற்கை தக்க பதிலடியை கொடுத்தே தீரும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

மண்ணரிப்புதுரிதமாகஇடம்பெறுவதால் மண்ணில் உள்ள மேல் மென் படையான புடை என கூறப்படும் படை அடித்து செல்லப்படுகிறது. இதனால் மண்வளம் குன்றுகின்றது. உலகளாவிய ரீதியில் வருடந்தம் 25000 மில்லியன் தொன் மேல் மண் படை பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றது.

மண்ணரிப்பு காரணமாக மண்ணில் உள்ள சேதன கூறுகள் குறைவடைந்து செல்லும். இதனால் மண் வளமற்றதாக மாறும் அதேநேரம் காலப்போக்கில் தரிசு நிலங்களை தோற்றுவிக்கின்றன.

இதனால் ஏற்படும் பாதிப்பு எம் அனைவருக்கும் தான் என்பதை நாம் மறந்துவிட கூடாது. மண்ணரிப்பை தடுத்து நாம் வாழும் மண்ணை பாதுகாப்பது எம் ஒவ்வொருவரின் கடமையாகும். மண்ணரிப்பு தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம்.

மண்ணரிப்பை தடுக்க பாதுகாப்பு அணை கட்டுகளை அமைத்தல், புற்கள், மூடுபயிர்கள் போன்றவற்றை அதிகளவில் வளர்த்தல், காடழிப்பினை முற்றாக தடை செய்தல், முறையான விவசாயத்தினை மேற்கொள்ளல், நில முகாமைத்துவ முறைகளை கடைபிடித்தல், மந்தைகளை சுழற்சி முறையில் நிலங்களில் மேயவிடல் போன்ற முயற்சிகளினால் மண்ணரிப்பை எம்மால் இயன்றவரை தடுக்க முடியும்.

நாம் ஒவ்வொருவரும் முயற்சித்தால் எம்மை சுற்றியுள்ள மண் வளத்தை நிச்சயமாக பாதுகாக்க முடியும் அவ்வாறு ஒவ்வொரு தனி மனிதனும் சிந்தித்தால் மண்ணரிப்பை பாரியளவில் குறைக்க முடியும்.

காடழிப்பை தவிர்ப்பதும் அதிகளவில் மரங்களை நடுவதும் மண்ணரிப்பை துரிதமாக குறைத்துவிடும். மேலும் அதிகளவில் மரங்களை வளர்ப்பது மண்ணரிப்பை தடுக்க மாத்திரமன்றி அளப்பறிய நன்மைகளை பயக்கும்.

இன்றுஉலகில்காணப்படும்பலவிதமான சூழல் பிரச்சினைகளுக்கு காடழிப்பு காரணமாக இருக்கின்றது. இது குறித்து மக்கள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும். இந்த பூமி மனிதனுக்கு மட்டும் சொந்தமானது இல்லை எம்மைப்போல் இதில் பல்லாயிரம் கோடி ஜீவராசிகள் வாழ்கின்றன. எமது பொறுப்பற்ற செயற்பாடுகளால் அவற்றை தொந்தரவு செய்யவோ, அழிக்கவோ எமக்கு எந்த உரிமையும் இல்லை.

காடழிப்பின் காரணமாக உயிரின பல்வகைமை அழிக்கப்படுகின்றது மட்டுமன்றி சூழலையும் தரம் குறைத்து விடுகின்றது. மேலும் காலநிலை மாற்றம், புவியியல் சார்ந்த தாக்கங்களையும் ஏற்படுத்துகிறது.

நாம் வாழும் மண்ணை பாதுகாத்து நம் எதிர்கால சந்ததிகளுக்காக இந்த மண்ணை கொஞ்சமாவது விட்டுவைக்க வேண்டியது எமது கடமையாகும். எனவே, மண்ணரிப்பை தூண்டும் காரணிகளை முடிந்தளவு குறைத்துக் கொள்வதுடன் இயற்கையாக ஏற்படும் மண்ணரிப்பையும் பகுத்தறிவு படைத்த மனிதர்களாகிய நாமே தடுக்க வழி செய்ய வேண்டும்.

எமது வளர்ச்சியும் அறிவும் பூமியில் வாழும் எல்லா உயிர்களையும் பாதுகாக்க பயன்பட வேண்டுமே தவிர, அழிப்பதற்கு அல்ல என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்தாலே போதும் இந்த பூமியை அழிக்கும் செயற்பாடுகள் வலுவாக குறைந்துவிடும் என்பது உறுதி.

# செயற்கை நுண்ணறிவு: வரமும் சாபமும்!

கோதை ஜோதிலட்சுமி


அறிவியல் கண்டுபிடிப்புகளால் உலகம் பல்வேறு நன்மைகளை அடைந்துள்ளது. வாழ்க்கை எளிதாகியுள்ளது என்ற கருத்து ஒருபுறம் வைக்கப்படும்போதே, சுற்றுச்சூழல் சீர்கேடு முதல் உளவியல் சுகாதாரச் சிக்கல்கள் வரை பல கேடுகளையும் தருவதாக மறுபுறம் பேசப்படுகிறது.

அதுபோலவே இந்த செயற்கை நுண்ணறிவு பற்றியும் இருவேறு கருத்துகள் நிலவுகின்றன.

இன்றைய இளைஞர்கள் அறிவியல் புலங்களில் உலகின் தலைசிறந்த பொறுப்புகளை வகிக்கின்றனர். பாரதத்தின் தொடர்ந்து வரும் அறிவுப் பாரம்பரியத்திற்கு இவை சான்றுகளாக இருக்கின்றன. பாரதம் நுண்ணறிவுக்குப் புகழ் பெற்றது. நமது வேதங்களில் ரிக் மற்றும் அதர்வண வேதங்கள் பல்துறை அறிவியல் பற்றித் தெளிவாகவும் விரிவாகவும் நுட்பமாகவும் பேசுகின்றன. இன்றளவும் வானவியல் முதல் மனித உளவியல் வரை அனைத்து ஆராய்ச்சிகளிலும் ஆய்வாளர்கள் வேதங்கள் சொல்லும் நுட்பத்தைக் கருத்தில் கொள்கின்றனர்.

தற்போதைய காலமானது தொழில்நுட்பங்களின் காலம். அதிலும் 'செயற்கை நுண்ணறிவு' என்ற சொற்றொடர் மிகுந்த பேசுபொருளாக இருக்கிறது. மனிதர்களின் நுண்ணறிவு மற்ற உயிரினங்களிலிருந்து அவர்களை வேறுபடுத்தி தலைமை கொள்ளச் செய்துள்ளது. மனிதர்களோ தொழில்நுட்பத்தின் அடுத்த பரிமாணமாகவும் படிநிலையாகவும் செயற்கை நுண்ணறிவு என்ற நுட்பத்தைக் கூறுகின்றனர்.

ஜான் மேக்கார்த்தி என்பவர் 1956-இல் 'செயற்கை நுண்ணறிவு' என்ற சொல்லை முதலில் அறிமுகப்படுத்தினார். செயற்கை நுண்ணறிவு என்பது இயந்திரங்களின் நுண்ணறிவு ஆகும். இத்தகைய நுண்ணறிவு கொண்ட இயந்திரங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட கணினி அறிவியலின் ஒரு பிரிவு. இதில் செயற்கை நுண்ணறிவுக் கருவி என்பது, தன் சூழ்நிலையை உணர்ந்து அதிக வெற்றி வாய்ப்புகளுக்குத் தக்கவாறு செயலில் ஈடுபடும் ஓர் அமைப்பாகும். அதாவது மனிதர்களைப் போலவே சூழ்நிலைக்கு ஏற்ப முடிவுகளை மேற்கொள்ளும் இயந்திரங்களாகும்.




இனி வரும் பத்தாண்டுகளில் இந்தத் துறையில் வேலைவாய்ப்புகள் பெருமளவில் உருவாகும் வாய்ப்பு இருப்பதாகவும் பல துறைகளுக்கும் ஏற்ற செயற்கை நுண்ணறிவு இயந்திரங்களை உருவாக்குவது தொழில்நுட்ப உலகின் நோக்கமாக இருக்கும் என்றும் உலக அறிவியலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அறிவியல் கண்டுபிடிப்புகளால் உலகம் பல்வேறு நன்மைகளை அடைந்துள்ளது. வாழ்க்கை எளிதாகியுள்ளது என்ற கருத்து ஒருபுறம் வைக்கப்படும்போதே, சுற்றுச்சூழல் சீர்கேடு முதல் உளவியல் சுகாதாரச் சிக்கல்கள் வரை பல கேடுகளையும் தருவதாக மறுபுறம் பேசப்படுகிறது.

அதுபோலவே இந்த செயற்கை நுண்ணறிவு பற்றியும் இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. அதிலும் அறிவியல் அறிஞர்களே இத்தகைய இருவேறுபட்ட கருத்துகளையும் முன்வைப்பதே உலகை சிந்திக்கச் செய்துள்ளது.

மருத்துவத் துறையில் நோயைக் கண்டறியும் சோதனைகளில் இந்தத் தொழில்நுட்பம் மிகத்துல்லியமான முடிவுகளைக் காட்டுகிறது. இதனால் உயிர் காக்கும் சேவையில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் முக்கியப் பங்காற்றுகிறது. அறுவை சிகிச்சையின்போதும் துல்லியமான மற்றும் அதிநுட்பமான சேவைகளை வழங்க அவசியமானதாகவும் இருக்கிறது.

புற்றுநோய் போன்ற கொடிய நோய்களுக்கான கதிரியக்க அறுவை சிகிச்சைகளில் பின்விளைவுகளைக் குறைக்கும் அளவில் நோய் பாதித்த பகுதிகளில் மட்டும் சிகிச்சை மேற்கொள்வதற்கு செயற்கை நுண்ணறிவு வரப்பிரசாதமாக உள்ளது என்று மருத்துவ உலகம் கொண்டாடுகிறது.

முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் செயல்பட உதவுவது, நோய் எதிர்ப்பு சக்தி மருந்து கண்டுபிடிப்பது போன்ற துறைகளில் செயற்கை நுண்ணறிவின் உதவி அளப்பரிய அளவில் இருப்பதை மறுக்கமுடியாது. மருத்துவத் துறை மட்டுமல்லாது விவசாயம், கட்டடப் பணி, பொறியியல் துறைகள் என்று நாம் இதன் பயன்களை விரிவுபடுத்த முடியும்.

விண்வெளி ஆய்வு போன்ற அதிக செலவினம் கொண்ட ஆராய்ச்சிகளில் வெற்றியின் சாத்தியத்தை விரிவுபடுத்த

இந்த நுண்ணறிவு பெரிய அளவில் பயன்படும். அதோடு சில துறைகளில் மனிதத் தவறுகளை முற்றிலும் தவிர்க்கும் வகையிலும் செயற்கை நுண்ணறிவு பயன்படுகிறது.

இப்போது நாம் செயற்கை நுண்ணறிவு சார்ந்த பல தொழில்நுட்ப சாதனங்களை நம்முடைய அன்றாட வாழ்வில் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறோம். ஆனாலும் இது ஆரம்ப நிலைதான்.

பாதைகளில் போக்குவரத்து நெரிசல் எந்தப் பகுதிகளில் உள்ளது என்பதைச் சொல்லும் கருவிகள் மற்றும் செயலிகள், நாம் சொல்வதைக் கேட்டு அதனை செயல்படுத்தும் 'அலெக்சா' போன்ற கருவிகள், இன்னும் மொழி அடிப்படையில் சில செயலிகள் என நம்முடைய அன்றாடங்களில் இந்தத் தொழில்நுட்பம் இடம் பிடித்துவிட்டது.

ஆனால், பல செயற்கை நுண்ணறிவுக் கருவிகள், மனிதர்களின் எண்ணவோட்டங்களை கணித்து அதன் அடிப்படையில் முடிவுகளை எடுக்கின்றன. அவற்றின் உள்ளடக்கம், கலை மற்றும் இசைக்கான முன்னுரிமைகள் என அனைத்தும் இக்கருவிகளைப் பயன்படுத்தி வருபவர்களின் தனிப்பட்ட விருப்பங்களை ஒட்டி உருவாக்கப்படுகின்றன. அதனால் அவை செயல்படும் விதமும் அதன் அடிப்படையிலேயே இருக்கும்.

இதில் பயன்கள் இருப்பதைப் போல தீமைகளும் பன்மடங்கு இருப்பதாக அறிவியலாளர்கள் எடுத்துச் சொல்கின்றனர். அடுத்த தலைமுறை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சியை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும் என கடந்த மார்ச் மாதம் 'டெஸ்லா' நிறுவனத்தின் தலைவர் எலான் மஸ்க் உள்ளிட்ட வல்லுநர்கள் கூட்டாகக் கையொப்பமிட்டு ஒரு திறந்த கடிதத்தை வெளியிட்டனர்.

அந்தக் கடிதத்தில், 'செயற்கையாக உருவாக்கப்படும் மனங்கள் ஒரு கட்டத்தில் மனிதர்களை விட திறமை மிக்கவையாக மாறி, அதிக எண்ணிக்கையில் பெருகி, மனித இனத்தையே அழித்துவிடும் அளவுக்கு பாதிப்புகள் ஏற்படும்' என எச்சரிக்கப்பட்டிருந்தது. இந்தக் கடிதம் தந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து, ஊடகங்கள் இது பற்றிய விவாதங்களைத் தொடங்கின.

'செயற்கை நுண்ணறிவு மனித இனத்தின் அழிவுக்கு வழிவகுக்கும் என 'ஓபன் ஏஐ' தலைமை செயல் அதிகாரி சாம் ஆல்ட்மேன், கூகுள் 'டீப்மைண்ட்' நிறுவன தலைமை செயல் அதிகாரி டெமிஸ் ஹஸ்ஸாபிஸ் மற்றும் அத்துறையைச் சேர்ந்த வல்லுநர்களும் எச்சரித்துள்ளனர். இந்த செயற்கை நுண்ணறிவு என்பது பொதுமக்களின் பெரும் அளவிலான செல்வங்களை சொற்ப எண்ணிக்கையிலான தனியார் நிறுவனங்களுக்கு மாற்றும் செயல்களைச் செய்யவும் பயன்படுகிறது என்ற குற்றச்சாட்டு குறிப்பாக சொல்லப்படுகிறது.

செயற்கை நுண்ணறிவின் காரணமாக மனிதகுல அழிவிற்கான ஆபத்து ஏற்படுவதைத் தடுக்க, கரோனா, அணு ஆயுதப் போர் உள்ளிட்டவற்றைத் தடுப்பதற்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தை அளிக்க வேண்டும் என்ற கருத்தும் தற்போது தெரிவிக்கப்படுகிறது. இத்தகைய அச்சம் மிகைப்படுத்தப்பட்டது என்று அதற்கு எதிர்வினையாற்றுவோரும் இருக்கின்றனர்.

செயற்கை நுண்ணறிவினால் எத்தகைய பேரிடர்கள் ஏற்படக் கூடும் என்பது பற்றி செயற்கை நுண்ணறிவு குறித்த பாதுகாப்பு மையம் சில தகவல்களை வெளியிட்டுள்ளது. அவற்றுள் தலையாயது, செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் பல மென்பொருட்கள் மற்றும் மின்னணு கருவிகளைப் பெரும் ஆயுதங்களாக சமூக விரோத கும்பல்கள் மற்றும் சில நாடுகளின் அரசுகள் பயன்படுத்தலாம். செயற்கை நுண்ணறிவின் துணையுடன் உருவாக்கப்படும் தவறான தகவல்கள் சமூகத்தை சீர்குலைத்து எதிர்மறையான பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

இவையெல்லாம் அணு ஆயுதம் வரையிலான அனைத்து அறிவியல் கண்டுபிடிப்புகளிலும் நாம் ஏற்கெனவே சந்தித்த சிக்கல்கள்தான். இணையப் பயன்பாடு கூட இதே விதமான சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனால், இவை எல்லாவற்றுக்கும் மேலாக மனிதர்கள் பெரும்பாலும் செயற்கை நுண்ணறிவைச் சார்ந்திருக்கும் நிலைமை ஏற்படும் என்று சொல்வது தான் அதிக அச்சுறுத்தலாக இருக்கிறது.

மனித மனம் ஒன்றைப் பற்றி நில்லாமல் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கக்கூடியது. அதன் செயல்பாடுகள் அதீதமானவை. அத்தகைய மனதை ஒரு கருவி ஆட்டிப் படைக்க முடியும் என்பதெல்லாம் மனிதன் தன்னையேதான் உருவாக்கிய இயந்திரத்தின் கையில் ஒப்படைப்பதற்குச் சமமாகும்.

தன்னை அறிதலும் மனதை வெல்வதுமே நமது சித்தாந்தங்கள் நமக்குக் கற்றுத் தந்திருப்பவை. வேதங்களும் தன்னை அறிவதே சிறந்த தவம் என்று போதிக்கின்றன. வேதங்கள் சொன்ன இதே கருத்தையே சிந்தனாவாதிகளும் கற்றுக்கொடுத்தனர். சாக்ரடீஸ், 'உன்னையே நீ அறிவாய்' என்கிற தன்னுடைய சித்தாந்தத்தை உலகுக்குத் தந்தார்.

தன்னுடைய மனதை வெல்வதற்கான உபாயத்தைக் கண்டு அதன் வழி நடப்பதே நாம் இன்பமாய் வாழ்வதற்கான அடிப்படை என்று இருக்க நாம் ஒரு செயற்கையான நுண்ணறிவுக்கு நம்மை ஒப்புக்கொடுப்பது அடிமைத்தனத்தை விரும்பி வரவேற்பதாகும். நமது மனமோ அறிவோ நம்மால் உருவாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவோ எதுவானாலும் நாம் அதனை அடக்கி ஆள்வதே வெற்றி.

இதையே மகாகவி பாரதியார்,

**'பேயாய் உழலும் சிறுமனமே!**
**பேணாய் என்சொல்; இன்று முதல்**
**நீயாய் ஒன்றும் நாடாதே!**
**நினது தலைவன் யானே காண்;**
**தாயாம் சக்தி தாளினிலும்**
**தருமம் என யான் குறிப்பதிலும்**
**ஓயாதே நின்று உழைத்திடுவாய்**
**உரைத்தேன் அடங்கி உய்யுதியால்'**

என்று மனதுக்குக் கட்டளை இடுகிறார்.

எத்தகைய அறிவியல் கண்டுபிடிப்பாயினும் அது நமது வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு உதவ வேண்டுமே அல்லாது நம்மை சோம்பேறிகளாக்குவதற்கும் அடிமைப்படுத்துவதற்கும் பயன்படக்கூடாது. எளிமையான வாழ்க்கைக்கு நாம் பழகிக் கொண்டு விட்டால் இது போன்ற செயலிகள், தொழில்நுட்பங்கள் நம் அன்றாடங்களைப் பாதிக்க முடியாது.

வேதங்கள் அறிவியல் ஆராய்ச்சிகளை நுட்பமாக முன்வைத்தாலும் அவை ஒழுக்கக் கோட்பாட்டில் மெய்யியல் தத்துவங்களில் கவனம் செலுத்தியிருப்பதை நாம் நுணுக்கமாக உற்றுநோக்கக் கற்றுக்கொண்டால் அவை கற்றுத்தரும் வாழ்வியல் நமக்கு வசப்பட்டுவிடும்.

அறிவியல் கண்டுபிடிப்புகள் எப்போதும் வரத்தோடு சாபத்தையும் கொண்டு வருவனவே. செயற்கையின் கைகளில் நம்மை ஒப்புக்கொடுப்பதை விட இயற்கையின் கைகளில் பாதுகாப்பாக இருக்க மீண்டும் பழகிக்கொண்டால் இயற்கை நம்மை, நமது உடல், மன நலன்களைப் பாதுகாத்து நோயற்ற வாழ்வளிக்கும். அடுத்த தலைமுறைக்கான பாதுகாப்பும் உறுதிப்படும்.

# இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு வருகிறதா?

இலங்கையில் உணவுக்கான தட்டுப்பாடு நிச்சயம் ஏற்படும் என்ற போதிலும், உணவுத் தட்டுப்பாட்டினால்வரும்உயிரிழக்கும்நிலைமை ஏற்படாது என களனி பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை பேராசிரியர் பண்டார வன்னிநாயக்க தெரிவிக்கின்றார்.

உலகத்தைஅச்சுறுத்திவரும்கோவிட்வைரஸ் பரவல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்தும் பாரிய எதிர்நிலை சவாலை நோக்கி நகர்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் கையிருப்பிலுள்ள அந்நிய செலாவணி தொகை வெகுவாக குறைவடைந்து வருவதை அடுத்து, பல்வேறு பொருட்களுக்கான இறக்குமதிக்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இந்த நிலையில், இலங்கையில் தற்போது பெரும்பாலான பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவும் அதேவேளை, ஏனைய பொருட்களுக்கான விலை பெருமளவு அதிகரித்துள்ளதை காண முடிகின்றது.

## எரிபொருள் விலையேற்றம்

இலங்கையில் எரிபொருளுக்கான விலையை கடந்த சில தினங்களுக்கு முன்னர் அரசாங்கம் முன் அறிவித்தலின்றி, திடீரென அதிகரித்திருந்தது

ஒக்டேன் 92 ரக பெட்ரோல் ஒரு லிட்டர் விலையை 20 ரூபாய் அதிகரித்துள்ளதுடன், அதன் புதிய விலையாக 177 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒக்டேன் 95 ரக பெட்ரோல் ஒரு லிட்டர் விலை 23 ரூபாய் அதிகரித்த நிலையில், அதன் புதிய விலை 207 ரூபாயாக காணப்படுகின்றது.

ஒரு லிட்டர் டீசலின் விலை 10 ரூபாய் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலை 121 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒரு லிட்டர் சூப்பர் டீசலின் விலை 10 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 159 ரூபாயாகும்.

மண்ணெண்ணை ஒரு லிட்டரின் விலை 10 ரூபாய் அதிகரித்துள்ள பின்னணியில், அதன் புதிய விலை 87 ரூபாயாக காணப்படுகின்றது.

இலங்கை எதிர்நோக்கி வரும் அந்நிய செலாவணி நெருக்கடியை சமாளிப்பதற்கு டாலர் இல்லாமையினால், டாலர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் பெற்றோல் விலை அதிகரிக்கப்பட்டதாக மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவிக்கின்றார்.

எரிபொருள் விலையேற்றப்படுவதை அடுத்து, எரிபொருள் பயன்பாடு குறைவடையும் என அவர் கூறுகின்றார்.

அதனால், எரிபொருள் கொள்முதலை குறைத்துக்கொள்ள முடியும் என நம்புவதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவிக்கிறார்.

## பொருட்கள் சேவைகளின் விலைகளும் திடீரென அதிகரிப்பு

இலங்கையில்ஏற்கனவே பொருட்களுக்கான விலைகள், கட்டுப்பாட்டை இழந்து அதிகரித்திருந்த நிலையில், எரிபொருள் விலையேற்றத்துடன் மீண்டும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகள் மற்றும் கட்டணங்கள் வெகுவாக அதிகரித்துள்ளன.

எரிபொருள் விலையேற்றத்தை அடுத்து, உணவுப் பொருட்களுக்கு காணப்பட்ட கட்டுப்பாட்டு விலையை நீக்குவதாக, அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்திருந்தது.



இவ்வாறு கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டுள்ள நிலையில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உணவு பொருட்கள் வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதை காண முடிகிறது.

எரிபொருள் விலையேற்றத்தை அடுத்து, முச்சக்கரவண்டி கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலம் முதலாவது கிலோமீட்டருக்கு அறவிடப்பட்ட 50 ரூபாய் என்ற கட்டணம், தற்போது 80 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஒவ்வொரு கிலோமீட்டருக்கு அறவிடப்படும் 45 ரூபாய் என்ற கட்டணத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் சங்கம் கூறுகின்றது.

## பஸ் கட்டணம் அதிகரிப்பு

எரிபொருள் விலையேற்றத்துடன் பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

15 முதல் 20 வீதத்தினால் பஸ் கட்டணம் அதிகரிக்க வேண்டும் என அந்த சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில், போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவுடன், பஸ் உரிமையாளர்கள் அண்மையில் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர்.

இதன்படி, பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

## மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்பு

நாடு முழுவதும் மரக்கறி வகைகளுக்கான விலைகள் சடுதியாக அதிகரித்து வந்த நிலையில், எரிபொருள் விலையேற்றத்துடன் மேலும் மரக்கறி விலைகள் அதிகரிக்கும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதாக மரக்கறி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்குடன், செயற்கை உரத்திற்கு அரசாங்கம் தடை விதித்த நிலையில், விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்பட்டது.

இதையடுத்து, மரக்கறிகளின் விலைகள் அண்மைகாலமாக வெகுவாக அதிகரித்திருந்தன.

சில மரக்கறிகளின் விலைகள் 500 ரூபாயை தாண்டியிருந்ததுடன், சில மரக்கறிகளின் விலைகள் 1,000 ரூபா வரை அதிகரித்திருந்தன.

இவ்வாறான பின்னணியில், தற்போது எரிபொருளுக்கான விலை



அதிகரித்துள்ளமையினால், மரக்கறி கொண்டு செல்வதற்கான செலவினம் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

அதனால், எதிர்வரும் காலங்களில் மரக்கறிகளுக்கான விலைகள் மேலும் அதிகரிக்கும் என மரக்கறி விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

## இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு

இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளர் பேராசிரியர் உதித் கே ஜயசிங்க தெரிவிக்கிறார்

நாட்டில் தற்போது காணப்படுகிற நிலைமையின்படி நிச்சயமாக உணவுக்கான தட்டுப்பாடு ஏற்படும் என அவர், ஊடகங்களுக்கு கூறியிருந்தார்.

செயற்கை உரம் உள்ளிட்ட பிரச்சினைகளின் போது, விவசாய அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய உதித் கே ஜயசிங்கவிற்கு பதிலாக, புதிய செயலாளர் ஒருவர் விவசாய அமைச்சுக்கு நியமிக்கப்பட்டமை குறித்து கேள்வி எழுப்பிய தருணத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது செய்யப்பட்டுள்ள விளைச்சல் குறித்து அவதானிக்கும் போது, நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என்பதனை உறுதியாக கூற முடியும் என அவர் தெரிவிக்கின்றார்.

முன்னெச்சரிக்கையுடன் செயற்படும் பட்சத்தில், இந்த நிலைமையை தவிர்த்துக்கொள்ள முடியும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே, தான் இதனைக் குறிப்பிடுவதாகவும் அவர் கூறுகின்றார்.

அடுத்த வருடம் நிச்சயம் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் - மஹிந்த அமரவீர

அடுத்த வருடம் நிச்சயமாகவே உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பில் தாம் அமைச்சரவையில் பல்வேறு தடவைகள் கூறியுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

தரவுகள் மற்றும் கள ஆய்வுகளின் ஊடாக, தனக்கு இதனை உறுதியாக கூற முடியும் என அவர் கூறுகிறார்.

இலங்கையில் மாத்திரமன்றி, சர்வதேச நாடுகளும் இந்த உணவுத் தட்டுப்பாட்டை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

விவசாயத்தை அதிகரிக்கும் நோக்குடன், புதிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிக்கின்றார்.

## விவசாய அமைச்சரின் பதில்

இலங்கையில் எதிர்வரும் ஆண்டு உணவுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்பதனை தான் உறுதியாக கூறுவதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவிக்கின்றார்.

விவசாய நிலங்களில் 90 முதல் 95 வரையான காணிகளில் விவசாயம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையினால், நாட்டில் உணவுக்கான தட்டுப்பாடு ஏற்படாது என அவர் கூறுகிறார்.

இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என வெளியிடப்படும் கருத்தை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவிக்கிறார்.

## பொருளியல் நிபுணரின் பார்வை

இலங்கையில் உணவுக்கான தட்டுப்பாடு நிச்சயம் ஏற்படும் என்ற போதிலும், உணவுத் தட்டுப்பாட்டினால் எவரும் உயிரிழக்கும் நிலைமை ஏற்படாது என களனி பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை பேராசிரியர் பண்டார வன்னிநாயக்க தெரிவிக்கின்றார்.

உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் நிலையில், பலருக்கு உணவு உட்கொள்ளும் அளவை குறைக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என அவர் கூறுகிறார்.

விவசாய பொருட்களின் விநியோகம் குறைவடையும் போது, அந்த விவசாய பொருட்களுக்கான விலைகள் அதிகரிக்கும் என அவர் குறிப்பிடுகிறார்.

எனினும், ஏனையோருக்கு உதவும் இலங்கையர்களின் கலாசாரத்தினால், எவரும் உயிரிழக்கும் நிலைமை ஏற்படாது என அவர் தெரிவிக்கிறார்.

பட்டினியால் உயிரிழக்கும் நிலைமை இலங்கையில் என்றும் ஏற்படாது என அவர் கூறுகிறார்.

எவ்வாறாயினும், பொருளாதார ரீதியில் பெருமளவிலான பாதிப்புக்கள் எதிர்வரும் காலங்களில் ஏற்படும் என களனி பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை பேராசிரியர் பண்டார வன்னி நாயக்க தெரிவிக்கின்றார்.



# தென்னம்பிள்ளை நடுகை முறை

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை





தென்னங்கன்றினை எமது முன்னோர்கள்பிள்ளைஎன்றுஅழைத்ததற்கு காரணம்

எமது பிள்ளைகளை விட எம்மால் நடப்படும் தென்னம் பிள்ளைகள் எதிர்காலத்தில் அதாவது எங்களுடைய வயோதிப காலத்தில் எங்களை சிறப்பாக பார்க்கும் என்பதற்காக தான்.

பலநாடுகளிலும்மேற்கொள்ளப்படுகின்ற பெருந்தோட்ட பயிர்செய்கையில் தென்னை பயிர் செய்கைக்கு அந்த அந்த நாட்டு அரசு முக்கியத்துவம் கொடுக்கின்றது.

ஏன் இலங்கையிலும் கூட கடந்த காலங்களில் தென்னை பயிர்செய்கை ஊடாக எமது நாட்டிற்கு அதிக அந்நிய செலாவணி சம்பாத்தியத்தினை பெற்றுக் கொடுத்தது என்றால் அது மிகையாகாது.

ரசாயனம்இல்லாமல்இயற்கைமுறையில் தென்னங்கன்றுகளை நடுகை செய்வதே சிறந்ததாகும்.

இயற்கை முறையில் நடுகை பண்ணப்படும் தென்னங்கன்றுகளை பீடைகள் தாக்குவது குறைவாக இருக்கும்.

எமது முன்னோர்களும் இயற்கை முறையை பின்பற்றித்தான் மேட்டு நிலமாக இருந்தால் செப்டம்பரிலும் பள்ளகாணியாக இருந்தால் மார்ச், ஏப்ரலிலும். தென்னம்பிள்ளைகளை நடுகை செய்து இருக்கின்றார்கள்.

இதனால் தான் எந்த ஒரு பிரச்சனையும் அவர்கள் எதிர்நோக்கியது இல்லை.

பொதுவாக பண்ணையாளர்கள் தங்கள் இடத்திற்கு ஏற்ப நீர் கட்டமைப்பு சரியாக இருக்குமாக இருந்தால் ஆண்டு முழுவதும் தென்னம் பிள்ளைகளை நடுகை செய்யலாம்.

ஆனால் நீரூற்று அதிகம் உள்ள பள்ளமான நிலங்களில் தென்னம்பிள்ளை நடுகை செய்யக்கூடாது காரணம் சிறிய பிள்ளையாக இருக்கும்போதே விரைவில் வேர்அழுகிதென்னம்பிள்ளை இறந்துவிடும்.

மேட்டு நிலங்களில் தயங்காமல் நடுகை செய்யலாம்

தென்னங்கன்றினைஎமதுமுன்னோர்கள் பிள்ளை என்று அழைத்ததற்கு காரணம்

எமது பிள்ளைகளை விட எம்மால் நடப்படும் தென்னம் பிள்ளைகள் எதிர்காலத்தில் அதாவது எங்களுடைய வயோதிப காலத்தில் எங்களை சிறப்பாக பார்க்கும் என்பதற்காக தான்.

தென்னை மரங்களைப் பொறுத்தவரை நாட்டினம், கலப்பினம், கலப்பினத்திலும் பல ரகங்கள் என உள்ளது.

நாட்டினம் நீண்டகாலம்வரை காய்க்கக் கூடியதாகவும்.

கலப்பினத்திலும் 15 வருடம்வரை மற்றும் 30 வருடங்கள் என குறுகிய காலத்துக்கு மட்டும் காய்க்கக் கூடியதாகவும் இருக்கும்.

பொதுவாக தென்னம்பிள்ளை கற்கள் நிறைந்த நிலம், சதுப்பு நிலம் தவிருந்த அனைத்து நிலங்களிலும் வளரும் தன்மை உள்ளது அதிலும் குறிப்பாக செம்மண், மணல் மண் போன்ற இடங்களில் நன்றாக வளரும் தன்மை உள்ளது.

தூநடுகைக்குரியதென்னம்பிள்ளைகளை தேர்வு செய்யும் முறை

தூதென்னங்கன்றுகளை நடுகைக்கு தேர்வு செய்யும்போது குருத்து பகுதியை விட்டு மேலதிகமாக நான்கு அல்லது ஐந்து ஓலைகள் வந்த கன்றுகளை தேர்வு செய்ய வேண்டும்.

அதிலும்எங்களுடையஇடுப்புஉயரத்திற்கு வளர்ந்த கன்றுகளாக இருந்தால் போதும்.

தூகுறிப்பாக 3 அடிவளர்ந்தகன்றுகளை தேர்வு செய்ய வேண்டும்.

தூநான்கு, ஐந்து அடி அல்லது அதற்கு மேல் வளர்ந்த கன்றுகளை தேர்வு செய்யக் கூடாது.

தூதென்னம் பிள்ளைகளின் அடிப்பகுதி ஒரு கையால் பொத்தி பிடிக்க கூடியவாறு அடி பெருத்து இருக்க வேண்டும்.

தூதென்னம் பிள்ளைகளின் அடிப்பகுதி மெலிதாக நீண்டு வளர்ந்திருக்கும் கன்றுகளை தேர்வு செய்யக்கூடாது.

தென்னங்கன்றுகளில் நீண்டகால எந்த ரகத்தை தேர்வு செய்தாலும். நடும் பொழுது 24 × 26 அடி என்ற இடைவெளியில் குழி தோண்ட வேண்டும்.

இந்த இடைவெளியிலும் குறைவாக தென்னங்கன்றுகள் நட்டால்

எதிர்காலத்தில் தென்னங்கன்றுகள் வளரும் வீதம் குறையும் அதாவது அடி பெருக்காமல் மெலிதாக வளரும்.

அதோடு காய்க்கும் வீதமும் குறையும்.

அதாவதுபாலைகள்மெலிதாகஇருக்கும். குரும்பட்டிகள் அதிகமாக பிடித்தாலும் பிறகு அதிக அளவில் குரும்பட்டிகள் உதிர ஆரம்பிக்கும்.

காலப்போக்கில் ஐந்து, ஆறு காய்கள் மட்டுமே இருக்கும்.

கன்று நடுகைக்கு 3 ஷ 3 ஷ 3 அடி என்ற அளவில் குழி தோண்ட வேண்டும்.

முதல் 1 1/2 அடியில் தோண்டும் மண்ணை ஒருபக்கமும்.

அதற்கு கீழ் தோண்டும் 1 1/2 அடி மண்ணை இன்னொரு பக்கமும் போட வேண்டும்.

( இந்த குழியில் தோண்டப்படும் கீழ் மண்ணை மீண்டும் நடுகைக்கு பயன்படுத்தக் கூடாது)

### பின்பு குழிக்குள்.

தேங்காய் உரித்த பொச்சி மட்டைகளை 3அடுக்கில்தும்பு மேல்நோக்கி இருக்குமாறு பரப்பவேண்டும்.

இதற்கு மேல் ஒரு கை பிடி உப்புகல் எடுத்து தூவி விடவேண்டும்

பின்பு பொச்சிமட்டைக்கு மேல் 1 1/2 அடி கணத்தில்.

நாங்கள்வெட்டிவைத்தமேல்மண்ணுடன் மக்கிய உரம் அல்லது ஆட்டு எரு அல்லது கோழி எரு 10kg , அதோடு 2kg சாம்பல் கலந்த பின்பு மேல் கூறியவாறு பொச்சி மட்டைக்கு மேல் ஒன்றரை அடி கணத்திற்கு கலவையில் ஒரு பகுதியை போட வேண்டும்.

### குறிப்பு

மேற்குறிப்பிட்ட கலவையில் மாட்டு எரு பயன்படுத்தக் கூடாது.

காரணம் தென்னங்கன்றுகளை தாக்கக்கூடிய வண்டுகள் உற்பத்தியாக வாய்ப்பு உள்ளது.

இதன்பிறகு தென்னங்கன்றை குழியின் மையத்தில் வைத்து மீதமுள்ள மேல் மண் கலவை அனைத்தையும் தென்னம் பிள்ளையை சுற்றியுள்ள குழிக்குள் போட வேண்டும்.

அதிலும்குறிப்பாகதேங்காயின்மேற்பகுதி சிறிது தெரியும்படி பரப்ப வேண்டும்.

மேற்கூறியவற்றை செய்த பின்பு. குழி முற்றாக நிரம்பி நில மட்டத்திற்கு சமமாக வந்துவிடும்

இதற்குமேல். தேங்காய் உரித்த பொச்சி மட்டைகளை ஒரு அடுக்கில்.



தும்பு பகுதி கீழ் நோக்கி இருக்குமாறு தென்னங்கன்றின் அடிப்பகுதியிலிருந்து 1/2 அடி தள்ளி மூடிய குழி தெரியாதபடி வட்ட வடிவில் பரப்பிவிடவேண்டும்.

இவ்வாறு செய்வதனால் குழியின் அடிப்பகுதியில் வைக்கப்பட்ட பொச்சி மட்டைகள் நீரினை உறிஞ்சிதக்க வைத்துக் கொள்ளவும்.

குழியின் மேற்பகுதியில் அடுக்கிவைத்த பொச்சி மட்டைகள் நீர் ஆவியாதலை தடுத்து குளிக்குள் எப்போதும் ஈரப்பதன் இருக்கும்.

இதனால் நீர் வீண்விரயம் ஆவது தடுக்கப்படும்.

எதிர்காலத்தில் சிறந்த விளைச்சலை கொடுக்கும்.

அதோடு தென்னங்கன்று சிறிது வளரும் வரை ஈரப்பதன் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

இத்தென்னங்கன்றுகள் காய்க்கும் வரை ஒவ்வொரு வருடமும் மேலுரமாக மக்கிய உரம் அல்லது தொழு உரம் இடவேண்டும்.

தென்னம்பிள்ளைகள் காய் பிடிக்கும் வரை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பச்சை மட்டைகளை வெட்டக்கூடாது.

காரணம் தென்ன மட்டை வெட்டப்பட்ட பகுதியில் இருந்து வரும் ஒருவகை வாசத்தால் வண்டுகள் அவ்விடத்திற்கு கவர்ந்து இழுக்கப்படும்.

நாட்டு ரகமாக இருந்தால் 6 வருடத்தில் காய்க்க ஆரம்பிக்கும்.

கலப்பு ரகமாக இருந்தால் 4 1/2 வருடம், 3 1/2 வருடம் என ரகத்திற்கு ஏற்ப காய்க்க ஆரம்பிக்கும்.

எந்த ரகமாக இருந்தாலும் விரைவாக தென்னம்பிள்ளைகளைகாய்க்கவைப்பதாக இருந்தால். அது எங்கள் பராமரிப்பில் மட்டுமே உள்ளது.

நாட்டு ரகமாக இருந்தால் ஆண்டொன்றுக்கு

150 – 200 காய்கள் உற்பத்தி இருக்கும்.

இந்த உற்பத்தி 40 தொடக்கம் 50 வருடங்கள் வரை எமக்கு கிடைக்கும்.

கலப்பு ரகமாக இருந்தால் ஆண்டொன்றுக்கு 300 – 350 காய்கள் உற்பத்தி இருக்கும்.

இந்த உற்பத்தி ரகத்திற்கு ஏற்ப 10 தொடக்கம் 30 வருடங்கள் வரை எமக்கு கிடைக்கும்.

ஆரம்ப காலத்தை விட தற்பொழுது காலநிலை மாற்றம் மோசமாக உள்ளது இனி வரப்போகும் நாட்களும் அவ்வாறே இருக்கும்என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

ஆகையால் எதிர்காலத்தில் இளநீர் தேவை அதிகளவில் இருக்கும் என்பதிலும் மாற்றுக் கருத்து இல்லை.

எமது நாடுகளில் மாத்திரம் அல்ல வெளிநாடுகளிலும் கூட தேங்காயாக இருக்கட்டும், இளனியாக இருக்கட்டும் சந்தை வாய்ப்பு அதிகமாகவே உள்ளது.

அதோடு தென்னை மரத்திலிருந்து வரும் அனைத்தும். மாற்று உற்பத்திக்கு பயன்படுத்தக்கூடிய பொருட்களாகவே இருக்கின்றது.

அவைகள் அனைத்தும் எமது அத்தியவசிய தேவைகளில் பயன்படுத்தக் கூடியதாகவே இருக்கின்றது.

### குறிப்பு

முடிந்தவரை உங்கள் தென்னந் தோட்டங்களில் நீண்டகால பயிர்களை ஊடுபயிராக நடுவதை தவிர்த்து ஆறு மாதத்திற்கு உட்பட்ட தானியங்கள் போன்ற குறுகிய காலப் பயிர்களை ஊடுபயிராக பயிரிடலாம்.

# கீரையும் கிண்டலும்

**சும்மா ஒரு கணக்குப் பார்ப்போம் . யானையின் கன்று பிறக்கும் போது அது 800 -1000 கிலோ வரை இருக்கும் .
ஓர் விலங்கின் உடல் நிறையில் 70% எலும்புகளால் ஆனது என்றால் , யானைக்குட்டியில் 700 கிலோ எலும்பு காணப்படும் .
இந்த எலும்பில் உள்ள கல்சியத்தைப் பெற அம்மா யானை அங்கர் குடித்ததா இல்லை அன்லீன் குடித்ததா ?
மதிய உணவில் , எனக்கு எப்போதும் ஏதாவது கீரையும் தயிரும் இருக்க வேண்டும் .மழைக்காலம் பனிக்காலம் என்ற பாகுபாடு எல்லாம் கிடையாது. எல்லாக்காலமும் எனக்கு கீரைக்கான காலமே .**

'இண்டைக்கு இலை வகை ஒண்டும் இல்லையப்பா .

கடைக்கு போனால் கீரை வாங்கியாங்கோ' என்றார் மனைவி .

நேரேபின்வளவிற்குப்போனேன்.வேலியில் கொவ்வை மதாளித்து படர்ந்திருந்தது .

கொஞ்சத்தை வலித்துக் கொண்டுவந்து கொடுத்தேன் .

மழைக்காலங்களில் , நிலத்தோடு படர்ந்து வளரும் அல்லது நிலத்துக்கு அண்மித்தாக வளரும் , கீரை , வல்லாரை , பொன்னாங்காணி , கங்கூன் , பயிரி ,தொய்யில் ஆகியவற்றை நான் உண்பதில்லை .

மழை வெள்ளத்தில் வந்த கண்ட அழுக்குகளும் இவற்றில் படிந்திருக்கும் .

நிமிர்ந்து வளரும் கீரையில் கூட மண் தெறித்து அதன் கீழ் இலையில் ஒட்டி இருக்கும்.

அந்த மண்ணில் ஒட்டுண்ணிப் புழுக்களின் முட்டைகள் இருக்கக் கூடும் .

ஆகையால் மழைக்காலங்களில் எனது தெரிவு , உண்ணக் கூடிய மர ,கொடி வகைக் கீரைகளே . இவற்றில் அழுக்கு வெள்ளம் பட்டிருக்க நியாயமில்லை .

இம் மர , கொடிவகைத் தாவரங்கள் ஆழ வேர் ஓடுவதால் , இவற்றில் மற்றையவகைக் கீரைகளில்கிடைக்காத நுண்மூலகங்களும் சுவட்டு மூலகங்களும் தாராளமாக காணப்படுவதோடு பலமருத்துவகுணங்களும் காணப்படுகின்றன.

சொன்னால் சிரிக்கக் கூடாது , நான் மாறி மாறி உண்ணும் மரவகை , கொடிவகை இலைகள் வருமாறு .

அகத்தி , கறிமுருங்கை , சண்டி , தவசிமுருங்கை,வாதநாராயணி , கறிவேப்பிலை , முசுட்டை , முல்லை , குறிஞ்சா , பாஷன் புருட் , பூனைக்காலி ( சோத்துப்பழம்) முடக்கொத்தான் , முசுமுசுக்கை , தூதுவளை , கல்யாண முருங்கையின் துளிர் , புளியம் துளிர் , பிரண்டைத் துளிர் ...

இது தவிர தகரையின் துளிர்கள் வறை வறுத்து உண்ண மிகச் சுவையாக இருக்கும் .

நேற்று , பக்கத்துத் தோட்டக் காணியில் வளர்ந்திருந்த தகரை இலைகளைப் பிடுங்கி வந்து வறைசெய்து உண்டோம். மிகச்சுவையாக இருந்தது .

இது தவிர எமது வளவில் மணித்தக்காளி (மணத்தக்காளி வேறு மணித்தக்காளி வேறு ) என்னும் கீரை குப்பையாக வளர்ந்துள்ளது .

சிறிது கசப்பு சுவையானாலும் நல்ல மருத்துவ குணங்கள் கொண்டது .

வளவில் அதிகம் பெருகிக் காணப்படுவதால் அவற்றை பிடுங்கி எமது ஆட்டுக்கு போடுவோம் .

யாரும் தேவையானவர்கள் வந்து பெற்றுக் கொள்ளலாம் .

விதைகளைத் தபாலில் அனுப்பு என்று யாரும் கேட்கவேண்டாம் .

பழம் , சாறு நிறைந்ததால் விரைவில் முளைதிறனை இழந்து விடும் .



சும்மா ஒரு கணக்குப் பார்ப் போம்.யானையின் கன்று பிறக்கும் போது அது 800 ஈ1000 கிலோ வரை இருக்கும் .

ஓர் விலங்கின் உடல்நிறை யில் 70% எலும்பு களால் ஆனது என்றால் , யானைக்குட்டியில் 700 கிலோ எலும்பு காணப்படும் .இந்த எலும்பில் உள்ள கல்சி யத்தைப் பெற அம்மா யானை அங்கர் குடித்ததா இல்லை அன்லீன் குடித்ததா ?

புல், இலைகுழைகளில் இருந்தே அவ்வளவு கல்சியத்தையும் பெற்றது .



வடகோவை வரதராஜன்

எனவே நண்பர்களே கீரைகள் உண்போம் உடல்நலம் பேணுவோம்.

இது இப்படி இருக்க மதியம் கொவ்வை இலைக்கறியை மனைவி சுவையாக சமைத்திருந்தார் .

'கொவ்வை இலைக் கறி அந்தமாதிரி இருக்கப்பா '

'மெய்யப்பா ! கொவ்வைக் கறி வலு ரேஸ்ற்றாய் இருக்கப்பா '

என்ன நான் சொன்னது கேக்கேலையே'

நான் கத்திக் கத்திச் சொல்லியும் ஒரு மறுமொழியையும் காணாததால் எழும்பி குசினிக்குச் சென்றேன் .

ஏதோ அலுவலில் ஈடுபட்டிருந்தார் மனைவி

'ஏனப்பா , இவ்வளவு நேரமாய் நானும் சொல்லிக் கொண்டிருக்கிறான் .நீர் பேசாமல் இருக்கிறீர் '

'ஏதோ சொன்னனிங்களே ?

நான் ஆடு கத்து எண்டு நினைச்சன் '

'எவ்வளவு நேரமாய் சொல்லிக் கொண்டிருக்கிறான் . காதிலை விழாத மாதிரி நிற்கிறீர் '

'சத்தியமாய் எனக்கு ஆடு கத்தின மாதிரித்தான் கேட்டுதப்பா .

சொல்லுறதெண்டு கோவிக்காதேங்கோ . இப்பிடி ஒவ்வொரு நாளும் வகைவகையான இலைகுழைகளை சாப்பிட்டுச் , சாப்பிட்டு உங்கடை குரல் கிடாய் ஆட்டின்ரை குரல் மாதிரி வந்திட்டுதப்பா'

பெருமூச்சு விடுவதைத் தவிர வேறு ஒரு வழியும் எனக்குத் தெரியவில்லை நண்பர்களே .

# மருதம் பசுமை நகர்
## Marutham Green City

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

### உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

0777 43 55 57

# வருமா..? வராதா..?

இந்தா வருகுதடா
இரணைமடுத் தண்ணியென்றார்;
இருந்திருந்து பார்த்துவிட்டோம்
இதுவரைக்கும் வரக்காணோம்

தாழையடித் தண்ணிவந்து
தாகத்தைத் தீர்க்குமென்றார்;
தண்ணீரும் வரவில்லை
தாகமதும் தீரவில்லை.

அபிவிருத்தி வங்கியதில்
அழுதழுது எடுத்தகடன்
அடுத்தடுத்த சந்ததிக்கும்
அழுத்தத்தைக் கொடுக்குமென்று

கடனெடுத்துக் கடனெடுத்து
கட்டிவைத்த நீர்த்தாங்கி
படமெடுத்த பாம்பாட்டம்
பயனின்றி நிற்கிறது

தண்ணீர் வருமென்று
தாட்டுவைத்த குழாயெல்லாம்
துருப்பிடித்துத் துருப்பிடித்து
துகளாகப் போகுதுபார்

எலக்சன் வரமுன்னே
அவசரமாய் வந்தொருவர்
கலக்சன் வருமென்றா
கெதிகெதியாய் திறந்துவச்சார்

திறந்துவிட்ட தண்ணியப்போ
தவண்டுதவண்டு வந்தாலும்
தாவடியைத் தாண்டியிப்போ
மாவடிக்கே வந்திருக்கும்

கடகடென்று அவசரமாய்
கடுகதியாய் வந்ததால
கவிண்டு விழுந்தெங்கோ
காயப்பட்டுக் கிடக்குதாக்கும்

தண்ணீர் தராவிட்டால்
தயவுசெய்து ஐயாக்கள்
கறுத்தஅந்தக் குழாய்மூலம்
காற்றேனும் அனுப்புங்கள்

வெக்கைகால கோடைக்கு
வீட்டுக்குக் குழாய்பொருத்தி
ரைப்பைத் திறந்துவிட்டு
படுத்திருந்தது ஆறிடுவோம்

அரிசியிலும் பருப்பினிலும்
அரசியலைக் கலந்துவைத்தீர்
தாகத்துத் தண்ணீரில்
தயவுசெய்து கலக்காதீர்..!

தண்ணீரில் உரப்பசளை
தாறுமாறாய்க் கலந்ததனால்
அனுராத புரமக்கள்
அவதிமிகப் படுறாராம்

அரசியலார் 'கிட்னி'க்கு
ஆபத்து வந்ததென்றால்
அரசுஅதிபர் நிதியத்தால்
அவரதனை நிவர்த்திப்பார்

குடிமகனின் கிட்னிக்கு
கேடேதும் வந்துவிட்டால்
அடியறுந்து போய்க்குடும்பம்
குடிமுழுகிப் போய்விடலாம்

ஐயா! தலைமகனே!
ஏழைகளின் திருமகனே!
அவசரமாய் விண்ணப்பம்;

மனுக்குலத்தைக் காப்பாற்ற
மனதுவைத்து விடுமய்யா.....

**கவிஞர் வ. வடிவழகையன்**

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.01.2025 இல் வெளியிடப்பெற்றது.